பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 10 வெள்ளிக்கிழமை (23-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:117

# போர் நிறுத்தத்தை புலிகள் மேலும் ஒரு மாதம் நீடிப்பு!

## தொடர்ந்து அரசு உதாசீனம் செய்தால் ரத்துச் செய்யப்படும் என எச்சரிக்கை!

லண்டன்,மார்ச்23

**தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த ஆண்டு டிசெம்பரில் ஒருதலைப்பட்சமாக அறிவித்த போர்நிறுத்தத்தை மூன்றாவது தடவையாக மேலும் ஒருமாத காலத்துக்கு நீடித்துள்ளனர்.**

**• வன்னியில் உள்ள புலிகளின் சர்வதேச தலைமையகத்தில் இருந்து நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில், தமது நல்லெண்ண நடவடிக்கையை அரசுத் தரப்பு தொடர்ந்தும் உதாசீனம் செய்து, போர் நெருக்கடியைத் தணிக்காமல் இராணுவத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்துமானால் போர் நிறுத்தத்தைத் தாங்கள் ரத்துச் செய்ய நேரிடும் என்றும் புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

விடுதலைப் புலிகளின் சர்வதேச தலைமையகத்தில் இருந்து நேற்று விடுக்கப்பட்ட அதிகாரபூர்வ அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மத்தியிலும் - சந்திரிகா அரசின் கேலித்தனமான கூற்றுக்கள் மத்தியிலும் - விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவும் கட்டுப்பாடான முறையில் போர் நிறுத்தத்தைப் பேணி வருகிறது.

சமாதான முயற்சியில் நாம் உண்மையான அக்கறையுடையவர்கள் என்பதைச் சிங்கள அரசுக்கும், உலகத்துக்கும் உணர்த்தும் நோக்குடன் மாதாந்த அடிப்படையில் போர்நிறுத்தத்தை நாம் நீடித்து வருகிறோம். அத்துடன் எமது நல்லெண்ண முயற்சிக்கு ஆக்கபூர்வமாகப் பதிலளிக்குமாறும் நாம் சிங்கள அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வந்திருக்கின்றோம். ஆனால் சந்திரிகா அரசு எமது சமாதான முன்னெடுப்பை 'அரசியல் ஏமாற்று வித்தை' என நிராகரித்து வருகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் அதிரடிப்படையினர் ஒத்திகை

மட்டக்களப்பு,மார்ச்23

மட்டக்களப்பு மண்முனைத் துறை பகுதியில் விசேட அதிரடிப படையினர் நேற்று மாலை தாக்குதல் ஒத்திகை நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 5 மணிமுதல் சுமார் 45 நிமிட நேரம் நடத்தப்பட்ட இந்த ஒத்திகையால் மண்முனைத் துறைக்கும் மகிழடித்தீவுக்கும் இடையிலான படகுச் சேவை ஸ்தம்பிதமடைந்தது. (ஐ)

## கொழும்பில் வசித்த வேலணை யுவதியைக் காணோம்!

கொழும்பு,மார்ச்23

கொட்டாஞ்சேனை, சுமித்திரா மாவத்தையில் வசித்துவந்த வேலணை யுவதி ஒருவரைக் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் காணவில்லை என்று கொட்டாஞ்சேனைப் பொலீஸில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேலணையைச் சேர்ந்த மகாலிங்கம் மதனிகா (வயது 18) என்ற யுவதியையே காணவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

(ம-6)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

கொழும்பு,மார்ச்23

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பினார்.

நேற்றுமுன்தினம் ஒருநாள் விஜயமாக லண்டன் சென்றிருந்த அவர் அங்கு பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். (ம-6)

## தொப்பிகல காட்டுப் பகுதி மீது ஜெற் விமானங்கள் குண்டு வீச்சு!

### புலிகளின் தளம் அழிக்கப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு,மார்ச்23

மட்டக்களப்பு நகருக்கு மேற்கே 35 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் தளம் மீது ஸ்ரீலங்கா விமானப்படை "ஜெற்" விமானங்கள் நேற்றுக்காலை தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது.

இந்தத் தாக்குதலின் போது புலிகளின் 'பெய்ரூட்' தளம் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தத் தடவையும் வாய்ப்பைத் தவறவிட்டால் அரசின் சமாதான முயற்சிகள் நம்பகத்தன்மையை இழந்துவிடும்

### ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்23

விடுதலைப் புலிகள் இதய சுத்தியோடு தங்கள் போர் நிறுத்த காலத்தை மேலும் நீடித்திருக்கிறார்கள். இந்தத் தடவையும் இதனை ஏற்று யுத்தநிறுத்தம் செய்ய அரசு முன்வராவிட்டால் அரசின் சமாதான முயற்சிகள் நம்பகத் தன்மையை இழந்துவிடும்.

இவ்வாறு தெரிவித்தார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்.

விடுதலைப் புலிகள் தங்கள் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடித்திருப்பது பற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

இந்தத் தடவையும் அரசு வாய்ப்பைத் தவறவிடுமானால் நாடு பேரழிவையே சந்திக்க வேண்டிவரும். சமாதானத்தில் அக்கறை கொண்டிருப்பதாகக் கூறும் அரசு தற்போது முன்னெடுத்துவரும் அனைத்து முயற்சிகளின் உண்மைத் தன்மையும் இதன் மூலம் அர்த்தமற்றதாகிவிடும் என்றும் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். (ஐ)

## ஜி.சீ.ஈ.பெறுபேறுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியாகின

யாழ்ப்பாணம்,மார்ச்23

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணத்தில் நேற்று வெளியாகின.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் முடிவுகள் மட்டுமே கல்வித் திணைகள அதிகாரி மூலம் கொழும்பில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பலில் நேற்று எடுத்து வரப்பட்டன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அடுத்த வாரம் தபால் மூலம் அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்குரிய முடிவுகள் நேற்றே அந்தந்தப் பாடசாலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் புலிகளின் பகுதிக்கு அரச ஊழியர் செல்லக் கட்டுப்பாடு

### புதிய நடைமுறைகள் திடீரென அமுலுக்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்வதற்கு படையினர் கடுமையான புதிய நடைமுறைகளை அறிவித்துள்ளனர்.

இதனால் ஆசிரியர்கள் உட்பட அரச ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு அரச ஊழியர்கள் செல்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதை அடுத்து அங்கு அரசாங்கப் பணிகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எந்தவித முன்னறிவிப்பும் இன்றிப படையினரால் இந்தப் புதிய நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்கள் உட்பட இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்குச் செல்லும் அரச ஊழியர்கள் அனைவரும் சோதனைச் சாவடிகளில் கையெழுத்திட்டே செல்லவேண்டும் என்றும் -

அரச ஊழியர்கள் தனிப்பட்ட முறையிலோ அல்லது கடமை நிமித்தமோ கட்டுப்பாடு இல்லாத பகுதிகளுக்கு செல்வதானால் 233 ஆவது படைப் பிரிவுத் தலைமையகத்தின் அனுமதி பெறவேண்டும் என்றும் -

புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

முன்னறிவிப்பு ஏதுமின்றி இந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## காபூல் காட்சியகத்தில் உள்ள 40 புத்தர் சிலைகளும் உடைப்பு!

காபூல்,மார்ச்23

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள புராதன சின்னங்கள சேகரிப்பு மையமான காபூல் தேசிய அரும்பொருள்காட்சியகத்தில் இருந்த புத்தர் சிலைகள் அனைத்தும் உடைத்து அழிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தலிபான் தலைவர் முல்லா முகமட் ஓமரின் உத்தரவின்படி இந்த அரும்பொருள்காட்சியகத்தில் இருந்த 40 புத்தர் சிலைகளும் உடைத்து அழிக்கப்பட்டதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிலைகள் அழிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் முகமாக நீண்ட நாள்களாக மூடப்பட்டுக் கிடந்த அந்த அரும்பொருள் காட்சியகத்தை தலிபான்கள் நேற்று திறந்துவிட்டனர். அழிக்கப்பட்ட சிலைகளைப் பார்வையிட செய்தியாளர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. (ம-6)

## மடுமாதா சொரூபம் கொழும்பில்

கொழும்பு,மார்ச்23

சமாதானத்தை வலியுறுத்தும் மடுமாதா திருச்சொரூப பவனி நேற்றுக் கொழும்பை வந்தடைந்தது.

நேற்றுமுன்தினம் வத்தளையை வந்தடைந்த மடுமாதா சொரூபம் வத்தளை புனித அன்னமாள தேவாலயத்துக்கு எடுத்துவரப்பட்டது. அங்கு ஆராதனைகள் இடம்பெற்ற பின்னர் கிராண்ட்பாஸ் புனித யோசப் தேவாலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் அங்கிருந்து முகத்துவாரம் புனித யோசப் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சொரூப பவனி நேற்றுக் காலை கொழும்பை வந்தடைந்தது. (ம-6)

## படையினரின் வாகனங்கள் மீதும் சோதனை!

கொழும்பு,மார்ச்23

கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாகப் படையினர் பயன்படுத்தும் வாகனங்களையும் சோதனையிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நகர வீதிகளில் செல்லும் இராணுவ வாகனங்கள் அனைத்தும் நேற்றுமுன்தினம் முதல் இராணுவப் பொலீஸாரால் இடைமறிக்கப்பட்டு தீவிர சோதனைகளுக்கு உள்ளாக்கப்படு

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



## அமரர் முருகேசு பரமேஸ்வரன்

B.A. (MAD.) S.L.P.S.I.
(முன்னாள் அதிபர்,
செங்குந்த இந்துக் கல்லூரி)

09.03.2001 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் முருகேசு பரமேஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.03.2001) வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளன. அந்நிகழ்விலும் 25.03.2001 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

அழைப்பிதழ் கிடைக்காதோர் இதனையே தனிப்பட்ட அழைப் பாகக் கருதி இந்த நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு அழைக்கின் றோம.

தகவல்:
மனைவி, மகன்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

*செங்குந்தா வீதி,*
*திருநேல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.இளையப்பு கிருபாகரசூரியன்

எமது ஆலயத்தின் பரிபாலனசபைத் தலைவரும், சமூக சேவையாளருமாகிய திரு.இளையப்பு கிருபாகரசூரியன் அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாகவும், வடமராட்சி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு அவரது சேவை மேலும் சிறப்புற்றுத் தொடர எமது அம்பிகையைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

ஆலய தர்ம பரிபாலன சபையினர்,
ஆலய தொண்டர் சபையினர்,
கோயில் பற்று மக்கள்.

*ஸ்ரீமுதலி*
*அம்பாள் ஆலயம்,*
*தென்புலோலி.* (85745)

## சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், வல்வெட்டித்துறை.

# பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் (25-03-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருந்த மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட் டுள்ளதென்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகி றோம். கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப் படும்.

பூ.அகமணிதேவர்
செயலாளர்.

(85724)

## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

# வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் 31.03.2001 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் அங்கத்தவர்கள் அனை வரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கி றோம்.

சு.இராமலிங்கம்.
செயலர்.

பொ.சுந்தரலிங்கம்.
தலைவர்.

(85749)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு.

## அறிவித்தல்

**வெளி நிலைத் தேர்வு நாடிகளின் பதிவேடுகள்**

**கலை முதற்தேர்வு**
கல்வியாண்டு 1999/2000
**வணிக முதற்தேர்வு**
கல்வியாண்டு 1999/2000
**கலைமாணி பகுதி - I**
**கல்வியாண்டு 1999/2000**

மேற்படி கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடிகளாக பதிவு செய்தவர்கள் தங்களுக் குரிய பதிவேட்டினை 26.03.2001 திங்கட்கிழமை முதல் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்பு:** பிறப்புச் சான்றிதழின தும் கல்விச் சான்றிதழினதும் (க.பொ.த.உயர் தரம்) மூலப்பிர திகளை தயவுசெய்து கொண்டு வரவும்.

பதிவாளர்
22.03.2001 (C/15852)

## UNIVAC நிறுவனத்தின் மாபெரும் புலமைப்பரிசில்

1000 மாணவர்களுக்கு எமது நிறுவனத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசி லுக்கான போட்டிப் பரீட் சைக்கு இதுவரை பதிவு களை மேற்கொள்ளாத மாண வர்கள் 25-03-2001 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு களை மேற்கொள்ளவும்.

1201, K.K.S. Road,
Jaffna. (85727)

Director
UNIVAC

நாகம்ஸ்
சுன்னாகம்
குணால், சோனாலி, ரம்பா நடித்த
காதலர் தினம்
(ரீஸ்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
25.03.2001 முதல்
ஆனந்தப்பூங்காற்றே
(85732)

ராஜா
யாழ்ப்பாணம்
11 அக்கடமி அவாட் பெற்ற சிறந்த படம்
டைட்டானிக்
தமிழில்
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
28.03.2001 முதல்
வானத்தைப் போல
(C/15741)

லஷ்சுமி இணுவில்
விஜயகாந்த் (3வேடங்களில்)
மந்த்ரா, செந்தில்
நடித்த
சிம்மாசனம்
(ரிலீஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

## ஸ்ரீமதி சௌந்தராம்பாள் சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின்

# ஆத்ம சாந்திக் கிரியைகள்

கந்தரோடை அமரர் சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற லலிதாம்பாள் ஜகந்நாத ஐயர்.சி, சாந்தநாயகி அம்மா - குஞ்சிதபாதக் குருக்கள்.சி (கொழும்பு), லச்சுமி அம்மா - சோமஸ்கந்தக்குருக்கள்.வி (மயிலணி), கனக சபாபதிக்குருக்கள் - புவனேஸ்வரி அம்மா (கொழும்பு), சிவசரவண பவன் (சிற்பி) - சரஸ்வதி (கந்தரோடை), மீனாட்சி அம்மா - சேது மாதவஐயர்.சி (கந்தரோடை), நாகேஸ்வரி அம்மா சோமாஸ்கந்தக் குருக்கள் சோ (மயிலணி), பராசக்தி அம்மா - பரமேஸ்வரன் ஐயர்.வி (உடுவில்), சரஸ்வதி அம்மா - சுப்பிரமணியக்குருக்கள்.வி (கொழும்பு) அகிய தம்பதியினரின் முறையே ஆசைத் தாயாரும் அன்பு மாமியாரும் ஆகிய

**ஸ்ரீமதி சௌந்தராம்பாள்**
**சிவசுப்பிரமணியக் குருக்களின்**

**(இம்மாதம் 16 ஆம் திகதி கொழும்பில் சிவபதமடைந்தார்)**

தசாகம் முதலிய ஆத்ம சாந்திக் கிரியைகள் இம்மாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் கொழும்பில் நடைபெறவுள்ளன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறி யத்தருகின்றோம்.

மக்கள், மருமக்கள்.

*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (85743)

## அரசாங்க அறிவித்தல்

# ஏல விற்பனை

## பாவித்த உபகரணங்கள்

பாவித்த குளிர்சாதனப் பெட்டிகள், தட்டச்சு இயந்திரங்கள், சுவர் மணிக்கூடுகள், மின்விசிறிகள், வாகன பற்றறிகள் முதலியன யாழ். பொது வைத்தியசாலையில் 02.04.2001 மு.ப. 10.00 மணியள வில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

சித்தி பெறும் கேள்வியாளர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி அன்றைய தினமே பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

இப்பொருள்களை அன்றைய தினம் மு.ப. 9.00 மணி முதல் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி
(செல்வி) என்.கனகரத்தினம்
பணிப்பாளர்.

*பொது வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.* (C/15848)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி சின்னத்தம்பி கமலாவதி

**(அம்பி அக்கா)**

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவனை வசிப் பிடமாகவும் கொண்ட செல்வி சின்னத்தம்பி கமலாவதி நேற்றுமுன்தினம் (21-03-2001) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மாவின் மகளும், தெய்வ நாயகி (வேவி), செல்வநாயகி (கண்ணு), இராசநாயகி (கிச்சி) ஆகியோ ரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22-03-2001) வியாழக்கிழமை மாலை 6.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புன்னாலைக்கட்டுவன் இந்து மயானத்தில் தகனம்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.பாலசிங்கம் (மைத்துனர்).

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.* (85757)

## செல்வி கஜனி தேவராஜா

ஜேர்மனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கஜனி தேவராஜா இறைவனடி சேர்ந்தார்.

இவர் தேவராஜா - சசிகலா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், ஜன னியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சந்திரசேகரம்பிள்ளை மற றும் இராஜேஸ்வரி, தியாகராஜா, சத்தியபாமா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தர்மராஜா, தங்கா, வேல்முருகன், சஞ்சீவ், சந்திரகலா, சிவ கலா அகியோரின் பெறாமகளும், பவளராஜன்,ஞானகலாவாணி ஆகி யோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-01-2001 ஞாயிற்றுக்கிழமை ஜேர்ம னியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக் கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
S.தியாகராஜா (மைத்துனர்).
(Ret.G.S.)

*122/4, பலாலி வீதி,*
*கந்தர்மடம்.* (85748)

## திருமதி சுப்பிரமணியம் மனோன்மணி

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் மனோன்மணி 21-03-2001 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா சுப்பிரமணியத்தின் அன்பு மனை வியும், காலஞ்சென்ற திருமதி தம்பித்துரை இரத்தினம்மா, அருமைநாய கம் (SWISS) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பஞ்சலிங்கம் (பொறியி யலாளர் - ஆஸ்திரேலியா), புனிதவதி (இந்தியா), லீலாவதி (லண்டன்), யோகராணி (டயகம எஸ்டேற் அக்கரப்பற்றன), சத்தியபாமா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரஞ்சினி, ஜெயசுந்தரம், அருளானந்தம், விஜயன், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-03-2001) வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு உலகாரம் 600001 சென்னை என்ற முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்

தகவல்:
வேலாயுதம் சிறீகாந்தன்
மணியம் கடை, சூறாவத்தை
T.P 070- 212782
திருமதி நாகசயந்தினி சிறீகாந்தன்
(ராசாத்தி)
உப அஞ்சல் அதிபர்,
கோண்டாவில் மேற்கு.

இந்தியா
T.P:0091-442420717

(85737)

உதயன்

## விடுதலைப்புலிகளின் போர் நிறுத்தம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தம் நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை நள்ளிரவுடன் காலாவதியாகிறது. கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி நள்ளிரவு அறிவித்த ஒரு மாத காலப் போர் நிறுத்தம் இரண்டு தடவைகள் நீடிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதில் அரசு போதிய அக்கறை காட்டாத போதிலும் விடுதலைப் புலிகள் இரண்டு தடவைகள் தமது போர் நிறுத்தத்தை நீடித்தனர்.

அதனைப் பொருட்படுத்தி தமிழ்ப் பிரதேசங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளையும் கட்டுப்பாடுகளையும் தளர்த்துவதிலேனும் அரசு இன்னும் போதிய கவனம் செலுத்தவில்லை.

பேச்சுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இரண்டு தரப்புகளுக்கும் இடையே கடந்த மூன்று மாதங்களாக ஓடித்திரிந்த போதிலும், அதற்கான நடவடிக்கை எதுவும் அறிவிக்கப்படவில்லை; நடைமுறையாகவில்லை.

இதனால் விடுதலைப் புலிகள் சலிப்படையும் சாத்தியம் மிகுதியாக உண்டு என்ற ஊகம் மக்களிடையே நிலவுகிறது. இதே போன்ற சந்தேகம் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கும் வந்திருக்க வேண்டும்.

அதனாலேயே அவர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை அண்மையில் சந்தித்த போது, போர் நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலம் நீடித்தால் நல்லது என்று கோரினார்

அரசு போர் நிறுத்தம் செய்யாமல் இருக்க, புலிகள் மூன்றாவது முறையும் போர் நிறுத்தத்தை நீடிப்பது என்றால் அது யோசிக்க வேண்டிய விடயம். மக்கள் நலனில் அக்கறை உள்ள நாங்கள் அவர்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறோம். தலைவர் பிரபாகரனுடன் கலந்தாலோசித்து இது குறித்து முடிவு செய்வோம்— என்று அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.

அரசின் அக்கறை குறைந்த போக்கு— பேச்சுக்கு உகந்த நிலையை உருவாக்குவதில் அது காட்டும் அசமந்தமான அணுகுமுறை—விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை நீடிக்காமல், அதனை நிறுத்துவதற்கு உந்துதலாக இருந்து விடக் கூடாது என்பதே வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களின் விருப்பமாக உள்ளது.

தாம் அறிவித்த போர் நிறுத்தத்துக்கு முரணாக அதனை மீறி விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்துவதாக நாடாளுமன்றத்தில் கணக்குக் காட்டிக் கொண்டு, அரச தரப்பு தாக்குதல்கள் மற்றும் எறிகணை, விமானக்குண்டு வீச்சுக்களை நடத்தி வருகிறது. இதனை மெத்தனப் போக்கு என்றே தமிழ் மக்கள் கருதுகிறார்கள். இந்த மெத்தனப் போக்கில் இராணுவ நிலையில் மேலோங்கி நின்று பேசவேண்டும் என்ற நோக்கமும் தெரிகிறது.

சமாதானப் பேச்சை நாடி, காலடி வைத்துக் கொண்டு அதற்கான மேசையில் உயர்ந்து நிற்க நினைப்பது விரும்பத்தக்கதல்ல, எனினும் மக்கள் நலன் கருதி விடுதலைப் புலிகள் மூன்றாவது தடவையாக போர் நிறுத்தத்தை நீடித்து சமாதானத்தின் மீதுள்ள உறுதியான பற்றை வெளிப்படுத்தி உள்ளனர். இப்பத்தி எழுதி முடிந்த பின்னர் வந்த பிந்திய செய்தி அது.

# 45 ஹெக்டேயர் பரப்பில் பாதீனியம் களை பரவியது

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். மாவட்டத்தில் 45 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பாதீனியம் களை பரவியுள்ளதாக யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நெற்செய்கை மற்றும் மரக்கறி உற்பத்தி, கால்நடை அபிவிருத்தி உட்பட பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு 20 ஹெக்டேயராக இருந்த பாதீனியம் களை தற்பொழுது பல இடங்களில் பரவி வருவதாகவும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். சின்னத்துரை கேட்டுக் கொண்டார்.

அழிக்க அழிக்க பாதீனியம் களை முளைத்து வருவதாகவும் முளைகளிலே இவற்றை பிடுங்கி எரித்து விடவேண்டும் என்றும் —

இவற்றினைப் பிடுங்கும் போது கைகளுக்கு உறைகள் போடப்படவேண்டும் என்றும் கூட்டத்தில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருட இறுதியில் பாதீனியம் ஒழிப்பு வாரம் பிரகடனம் செய்யப்பட்டு பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்ட போதும் பாதீனியம் வேகமாகப் பரவி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது (ஐ 5)

## கிளிநொச்சி மாணவருக்குக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றிய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

## மக்களின் முறைப்பாடுகளை அடுத்து யாழ். நகரக் கடைகளில் பழரச 'ரின்'கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'ரின்' பழரசங்களை உண்டவர்களுக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளதாகக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து யாழ். நகர வர்த்தக நிறுவனங்களில் திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சகல பழரச ரின்களும் சுகாதாரப் பகுதியினரால் பறிமுதல் செய்யப்பட்டன

சுகாதாரத் திணைக்களத்தின் உணவு, மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன் தலைமையிலான குழுவினர் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு நேரில் சென்று இந்த பழரச ரின்களை பரிசோதனை செய்தனர்.

இந்த ரின்களில் பாவனைக் கால முடிவு குறித்து அரேபிய மொழியில் குறிப்பிட்டுள்ளது என்று கூறப்பட்டது.

இது குறித்து மேல் நடவடிக்கைகளுக்காக கொழும்பிலுள்ள உணவு, மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபையுடன் யாழ். சுகாதாரப் பகுதியினர் தொடர்பு கொண்டுள்ளனர். (க 5)

## நால்வர் மிதிவெடியால் கால் இழப்பு

தென்மராட்சி, மார்ச் 23

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த மாதம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தென்மராட்சிப் பிரதேசத்தில் நான்கு பொது மக்கள் மிதிவெடிகளில் சிக்கி கால்களை இழந்துள்ளதாகப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

புத்தூர் வடக்கைச் சேர்ந்த கந்தையா லோகேஸ்வரன் (வயது 38), அல்லாரை, தெற்கைச் சேர்ந்த வேலும் மயிலும்சிவபாலன்(வயது 18), மட்டுவில் வடக்கைச் சேர்ந்த மார்க்கண்டு சாந்தி ராஜ்குமார் (வயது 27), நுணாவில் கிழக்கைச் சேர்ந்த சபாரத்தினம் ஜெயரத்தினம் (வயது 48) ஆகியோரே மிதிவெடிகளில் சிக்கி காயமடைந்தோராவர். (ம-117)

## கூட்டம்

இலங்கை தொழில்நுட்பவியலாளர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் தலைவர் செ. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறஉள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும், சிறப்பு விருந்தினராக தொழிற் திணைக்களத்தைச் சேர்ந்த தொழில் உத்தியோகத்தர் எஸ். முத்துக்குமாரசாமியும், கௌரவ விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் இராசா தணிகாசலமும் கலந்து கொள்வார்கள். [ம-72]

## வானொலியில் இன்று தேர்உற்சவ சிறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 23

காரைநகர் திருமணற்காடு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் இன்று காலை 7 மணிக்கு கவிஞர் எம். பி. அருளானந்தன் வழங்கும் சிறப்புநிகழ்ச்சி ஒலிபரப்பாகும். (ஒ)

## நாடு கடத்துவது தொடர்பாக ஜேர்மனியில் புதிய சட்டம்

ஜேர்மனியின் நோர்ட் றெயின் வெஸ்ற் பேர்லின் மாநிலத்தில் அரசியல் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்ட இலங்கை அகதிகள் சொந்தக் கடவுச்சீட்டு இருந்தால் மாத்திரமே திருப்பியனுப்ப முடியுமென்று அந்த மாநிலம் சட்டம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

ஜேர்மனியிலிருந்து திருப்பியனுப்பப்படும் அகதிகள் வீண் தொல்லைகளுக்கு உள்ளாவதைத் தவிர்பதற்காக இந்தச் சட்ட மூலம் கொண்டு வரப்பட்டுள்ளதாக சட்ட வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியல் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுத் திருப்பியனுப்பப்படுபவர்கள் அவசரக் கடவுச்சீட்டுடன் திருப்பி அனுப்பப்படும்போது விமான நிலையங்களில் தொல்லைக்கு உள்ளாக்கப் படுவதாக முறைபபாடுகள் கிடைத்ததையடுத்தே இந்த மாநிலம் மேற்படி சட்டத்தை நிறைவேறறியுள்ளது.

ஜேர்மனியில் இருக்கும் ஏனைய மாநிலங்களிலும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## அஞ்சலர்களுக்கு தபால் சேவை பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ் மாவட்டத்தில் தபாற் சேவையை மேம்படுத்தும் நோக்குடன் பிரதி அஞ்சல் மாஅதிபர் நாயகத்தினால் (வடமாகாணம்) அஞ்சலர்களுக்கான (தபாற்சேவகர்) பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் முதற்கட்ட பயிற்சி வகுப்பு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் பயிற்சியில் தீவுப் பகுதியைச் சேர்ந்த 25 அஞ்சலர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். தொடர்ந்து ஏனைய இடங்களிலுள்ள அஞ்சலர்களுக்கான பயிற்சிகள் நடைபெறும். [ஐ-5]

## கும்பாபிஷேகம்

ஊர்காவற்றுறை, மார்ச் 23

யாழ். வண்ணார்பண்ணை ஸ்ரீஞான வைரவர் கோயில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9-15 மணி முதல் 10 மணிவரை நடைபெறவுள்ளது.

ஞாயிறு காலை 7-15 மணிக்கு சமயக் கிரியைகள் ஆரம்பமாகும். (க-16)

### உதயவாக்கு

அதிகாலையில் எழுந்தவனும், இளமையில் மணந்தவனும் வருந்தியதில்லை

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 23

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் அ. நடராசா தலைமையில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொள்வார். (க-10·90)

## சமய சந்நிதிகளில்

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் இம்மஹோற்சவத்தில் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை ரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-173)

★ ★ ★

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாளின் தேர் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

காலை 8-30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து முற்பகல் 10 மணிக்கு அம்பாள் தேரில் எழுந்தருளுவார்.

தீர்த்தத்திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறும். (ஐ)

★ ★ ★

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசேட பூசையும் சமய சொற்பொழிவும் இடம்பெறும். (ம-117)

## துப்பாக்கியுடன் பிக்கு கைது

கொழும்பு, மார்ச் 23

வெடிகுண்டு. துப்பாக்கி. சில ரவைகள் ஆகியவற்றை வைத்திருந்த பௌத்தபிக்கு ஒருவர் பேஸ்லைன் வீதியிலுள்ள அவரது பௌத்த விகாரையில் வைத்து பொரளை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஐ-20)

### நாளை

பங்குனி 11

சனிக்கிழமை

திதி: அமாவாசை முழுவதும்

நட்சத்திரம்: பூரட்டாதி பிற்பகல் 5.09 வரை.

அமாவாசை விரதம்

சுபநேரம்: 3.16 — 4.46

ராகுகாலம்: 09 16 — 10.46

(பழைய நேரப்படி)


யாழ் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

## வாலாம்பிகை பாகா போற்றி!

விண்ணோரின் குறையினையே தீர்க்க வேண்டி
விடமுண்டகண்டனே போற்றி! போற்றி!
மண் சுமந்து வைகைதனை அடைக்க வேண்டி
வந்தியின் பிட்டுண்ட பரனே! போற்றி!
பண்சுமந்த சுப்பையர் பாடல் கேட்டு
பாலமுது உண்கின்ற வைத்திய நாதா!
வண்ணார்மலி பண்ணையிலே வருவாய் போற்றி!
வாலாம்பிகை பாகா போற்றி! போற்றி!

வே. குமாரசுவாமி
(காரைநகர்)

★ சுப்பையர் என்பவர் இத்தலத்திற்கு ஊஞ்சல் பாடிய அனந்த சுப்பையர் என்பவரைக் குறிக்கிறது. இவரது ஊஞ்சற் பாட்டு தினமும் பாடப்பட்டு பள்ளியறையில் பாலமுது படைக்கப்படுகின்றது.

# மன்னாரில் கைதான குடும்பப்பெண்

# ஆடைகள் களையப்பட்டு சித்திரவதை!

## வன்னியில் இருந்து வந்தவருக்கு நேர்ந்த அவலம்

கொழும்பு, மார்ச் 23

மன்னாரில் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு கிளர்ச்சித் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இரு இளம் குடும்பப் பெண்களில் ஒருவர் ஆடைகள் களையப்பட்ட நிலையில் தாக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் மன்னார் உப்புக்குளத்திலுள்ள லொட்ஜ் ஒன்றுக்குச் சென்ற கிளர்ச்சித் தடுப்புப் பொலிஸார் (சி. எஸ். யூ ) வன்னியிலிருந்து தனது ஐந்து வயது மகனுடன் வவுனியாவுக்குச் செல்வதற்காக வந்திருந்த இளம் பெண்ணையும் அந்த லொட்ஜிலிருந்த மற்றொரு இளம்பெண்ணையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்ட போது வன்னியிலிருந்து வந்த பெண்ணின் கணவன் வெளியே சென்றிருந்தார்.

கைது செய்யப்பட்ட மேற்படி குடும்பப் பெண் அன்றிரவு கிளர்ச்சித் தடுப்புப் பிரிவினரின் அலுவலகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமான நிலையில் தாக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேளையில் இவரது ஐந்து வயது மகனும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இதே நேரம் இவருடன் கைது செய்யப்பட்ட மற்றப் பெண்ணும் தற்போது அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக வன்னியிலிருந்து வவுனியா மற்றும் மன்னார் வரும் இளம்பெண்கள் இவ்வாறு பல்வேறு துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகி வருவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக மன்னாரிலுள்ள மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.


அளவெட்டி

### தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய குளிர்த்தி விழா-2001

அம்பாள் அடியார்களே! மேற்படி குளிர்த்தி விழா எதிர்வரும் 26-03-2001 இரண்டாம் திங்கட்கிழமையன்று வழமை போல் வெகு சிறப்பாக நடைபெறும். அம்பிகை அடியார்கள் அனைவரும் விழாவில் பங்கு பற்றி அம்பாள் திருவருளைப் பெறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். பொருள், பண உதவி செய்ய விரும்புவோர் முன்னதாகவே தந்துதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

– ஆலய பரிபாலன சபையினர்

(85669)



### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1922 | 2001 |
| 12 | 02 |
| 16 | 21 |

திருமதி

**பூரணம் அருளம்பலம்**

(கைதடி, நுணாவில்)

பெண்மையின் பிறப்பிடமாய்
மென்மையின் இருப்பிடமாய்
பொறுமையின் சிகரமாய்
சிறுமை எனும் சொற்கிடமின்றி
பெருமையாய் வாழ்ந்த செழுந்திருவே அம்மா!
மௌனம் தான் மனையறத்தைப் பெருக்கும் என்று
புன்சிரிப்பால் உலகளந்த உத்தமியே!
இல்லறத்தை நல்லறமாக்கி இணையிலா மக்களைப் பெற்று

குலமென்னும் கொடி படர
குன்றாது உழைத்த குலக்கொடியே அம்மா!
எம் வாழ்வின் மங்காத மாணிக்கம் நீ
மனையறத்தின் மணிவிளக்கு நீ
செம்மையான செழுந்திரு நீ
சிந்தைக்கு உகந்த கனியமுது நீ

பெண்மையே! பெருந்தெய்வமே!
உன்னை இழந்து துடிக்கிறது இதயம்
துவள்கிறது மெய்
வடிக்கின்றோம் கண்ணீர் அம்மா!
நீயோ நாசதேசத்து நயவஞ்சகம் நிறை
தூசு வாழ்வைத் துறந்து
மாசித் திங்கள் மறை போற்றும் நன்னாளாய்
தேசுடன் சிவன் அருள் காக்கும் பொன்றலில்
பேசும் பேரின்பம் பெறச் சென்றனை அம்மா!
ஏற்றுவோம் என்றும் தாயே
போற்றுவோம் என்றும் உன்னை
காட்டிடுவாய் ஒளி வழி எமக்கு!

**கணவன், மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கலைமணி வீதி,
கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம். (85708)


### இந்து ஆரம்ப பாடசாலையில் நூலகம் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆண்டுப் பொதுக்கூட்டத்தையொட்டி புதிய நூலகம், தண்ணீர்த் தாங்கி போன்றன திறந்து வைக்கப்படவுள்ளன. (க-5)

### தொழில்நுட்பவியல் அலுவலர்கள் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 23

இலங்கை தொழில் நுட்பவியல் சேவையின் வகுப்பு ii பிரிவு 'ஆ' வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண்தடைப் பரீட்சை நாளை சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு நாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார். (க-10)

### நாடாளுமன்ற உறுப்பினருக்குக் கௌரவம்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற [த.வி கூ.) உறுப்பினர் சி. சிவமகாராஜாவின் சேவைகளைக் கௌரவித்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் (யாழ். கிளை) வலி. வடக்கு பிரிவினால் ''சமூக சேவையாளன்', என்ற வாசகம் பொறிக்கப்பட்ட ஞாபகார்த்தச் சின்னம் வழங்கப்பட்டது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி. வடக்கு பிரிவு தலைவர் இ. எஸ். விஜயராசசிங்கம் தலைமையில் மல்லாகத்தில் நடத்தப்பட்ட பிரிவு பசார விழாவிலே இந்த ஞாபகச்சின்னம் வழங்கப்பட்டது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி. வடக்குப்பிரிவுத் தலைவராக இருந்த காலத்தில் சி. சிவமகாராசா ஆற்றிய சேவைகளைக் கௌரவித்து இந்த விழா நடத்தப்பட்டது. [க-5]


### அறிவித்தல்

திக்கம் வடிசாலையின் சகல பிரிவின் ஊழியர்களையும் இன்று 23-03-2001 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பனை அபிவிருத்திச் சபை, தலைமை அலுவலகத்தில் தவறாது சமுகமளிக்கும்படி பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் அவர்கள் அறியத்தந்துள்ளார்.

–பொது முகாமையாளர்,
திக்கம் வடிசாலை.
(சி/15847)



### மாவட்ட மட்டத்திலான போட்டிகள்

நாவலர் சனசமூக நிலையத்திறப்பு விழாவை முன்னிட்டு பின்வரும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கிரிக்கெட் (6 பேர் குழு)
கரபந்தாட்டம் (Set up)
மரதன் ஓட்டம்

மேற்படி நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்ப முடிவும் ஒழுங்கமைப்பும் } 30 - 03 - 2001

அனுப்பும் முகவரி:
நாவலர் சனசமூக நிலையம்,
பறாளாய் வீதி, சுழிபுரம்.

[85734] – நிர்வாகம்.



### அறிவித்தல்

இத்தால் சகலருமறிக, புலோலி மேற்கு, சந்தஉடையார் ஒழுங்கை, பருத்தித்துறை தற்போது மேற்கு ஜேர்மனி இளையப்பர் உதயகுமார் பெண் மனோகரி ஆகிய நான், பருத்தித்துறையிலுள்ள எனது ஆதனங்கள் தொடர்பில் எனது தாயார் திருமதி சிவபாக்கியம் கந்தையாவுக்கு ஏற்கனவே நான் அற்றோணித் தத்துவப் பத்திரம் வழங்கியிருந்தேனென்றும், இது யாழ்ப்பாண கச்சேரியில் DB 106 என்ற இலக்கத்தில் 2000 ஆம் ஆண்டு மாசி 24 ஆம் திகதி பதியப்பட்டிருந்ததென்றும், தற்போது குறித்த அற்றோணித் தத்துவப் பத்திரத்தை நான் இரத்துச் செய்து அழித்து விட்டேனென்றும் இத்தால் வெளிப்படுத்தி, இந்த அறிவித்தலை வெளியிடுகின்றேன்.

வரைவு:

சபா ரவீந்திரன்
சட்ட ஆலோசகர். — உ. மனோகரி

(சி-15846) 2001-03-18



### ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 | 03 |
| 07 | 04 |
| 1943 | 2000 |

**அமரர் ஐயாத்துரை பரஞ்சோதி**

திதி: 23-03-2001

அன்புத் தெய்வமே! அப்பா — நீங்கள் மறைந்து
ஆண்டொன்று ஆகி விட்டதே! இப்போது
இங்கு நாம் வாடி நிற்கிறோம் தங்கள் நினைவின்
ஈரம் இன்னும் உலரவில்லை எம்கண்ணில்!
உலகிலிருந்தும் விடைபெற்ற தாங்கள் சென்ற
ஊரின் பெயரும் தெரியாது தவிக்கின்றோமே?
எமனவனின் பாசக்கயிறு தங்களை அழைத்ததோ?
ஏங்கும் எம் நெஞ்சத் துடிப்பும் கேட்கலையோ?
ஐயா உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஒவ்வொரு கணமும் விக்கினந் தீர்க்கும் அந்த
ஓங்கார மூர்த்தியைப் பிரார்த்தனை செய்கின்றோம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தங்கள் நினைவில் வாழும்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில். (85698)

# மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட நெதர்லாந்து வாசி சுட்டுக்கொலை!

## மொரட்டுவப் பகுதியில் சம்பவம்

கொழும்பு,மார்ச்23

கிறிஸ்தவசபை ஒன்றுக்கு மக்களை மதம் மாற்றி வந்தவர் என்று கூறப்படும் நெதர்லாந்து வாசி ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9மணிக்கு இனம்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்

மொரட்டுவ-இந்திபெத்தப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொரன்லிஸ் ஒபர் கோட் (51வயது) என்பவரே கொல்லபட்டவர் ஆவார்.

இவர் மொரட்டுவ இந்தி பெத்தப் பகுதியில் கடந்த 7 வருடங்களாக வாடகை வீடொன்றில் வசித்து வந்தார் என்றும் இவரது மதமாற்ற நடவடிக்கைகளால் இவருக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையே கடந்த சில காலமாக மனக்கசப்பு நிலவிவந்தது என்றும் மொரட்டுவ உதவிப் பொலீஸ் அத்தியட்சர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

7 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்குவந்த இவர் மொரட்டுவையில் உள்ள சர்வோதய தலைமையகத்துடன் இணைந்து ஒப்பந்த வேலைகளைச் செய்து வந்துள்ளார். 3 வருடங்களால் இந்த வேலையை கைவிட்டு சமூக சேவை பணிகளில் ஈடுபட்டு வந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கொலைஞர்கள் இவரது வீட்டுக்குச் சென்று, இவரது தலையில் முன்று தடவைகள் 'ரிப்பிட்டர்' துப்பாக்கியினால் சுட்டுவிட்டுத் தப்பி ஓடிவிட்டனர் எனவும் பொலீஸார் தெரிவித்தனர். (க)

# நகை அடகு பிடிக்கும் சேவையை இலங்கை வங்கி விஸ்தரிக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்23

இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நகை அடகு பிடிக்கும் சேவை வெற்றியளித்துள்ளதைத் தொடர்ந்து இத்திட்டம் ஏனைய கிளைகளுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை வங்கி பொது முகாமையாளர் தெரிவித்தார்.

தங்க நகைகளை அடகு வைப்பதன் மூலம் அவசர தேவைகளுக்காகப் பணம் வழங்கும் இத்திட்டத்தின் கீழ் யாழ்.மேற்தரக்கிளையில் பல லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் பெறப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

மக்களிடையே இதற்கு வரவேற்புக் கிடைத்துள்ளமைக்குப் பிரதான காரணம், தங்க நகைகளுக்கு சரியான மதிப் பீடு, உயர்ந்த பாதுகாப்பு என்பவற்றை எமது வங்கி வழங்கி வருகின்றது. மேலும் இந்த அடகுச் சேவைக்கான வருட வட்டி வீதம் எமது வங்கியில் 3 வீதம் குறைவாகவே அறவிடபபடும். அத்துடன் ஒரு மாதத்திற்கு மேற்படும் போது மாதங்களின் அடிப்படையில் அல்லாமல், மொத்த நாள்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே வட்டி அறவிடப்படுகின்றது. இது வாடிக்கையாளருக்கு மிகவும் சாதகமானதாகும் - என்றார்.

இதேவேளை, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய விசேட பயிற்சிகளை பெறுவதற்காக யாழ்.மேற்தரக் கிளையிலிருந்து ரி. நாகேந்திராவும், வவுனியா கிளையிலிருந்து எஸ்.பாலகாந்தனும் கொழும்பு சென்று திரும்பியுள்ளனர். (க-9-ரி)

### களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# தமிழ் இளைஞனின் கைது குறித்த அறிக்கையைத் தமிழில் வழங்க உத்தரவு

கொழும்பு,மார்ச்23

களுத்துறைச் சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் ஒருவருக்கு அவர் கைதானது பற்றிய முதல் அறிக்கையை தமிழ் மொழியில் வழங்கும்படி திருகோணமலை நீதிவானும், மேலதிக மாவட்ட நீதிபதியுமான எஸ்.தியாகேந்திரன் சம்பந்தப்பட்ட உதவிப் பொலீஸ் அதிபருக்கு உத்தவிட்டார்.

திருகோணமலைக் கடற்படைத் தளம் மீதான தாக்குதல் சம்பவத்தை அடுத்து, இராணுவத்தினரால் டி.இராஜேந்திரகுமார் என்பவர் கைது செய்யபட்டார். அதன் பின்னர் அவர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இவ்விளைஞர் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அப்போது அவர் தமது சட்டத்தரணி கா.சிவபாலன் மூலம் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தார்.

"என்னைத் தடுத்து வைக்கக் காரணமான பொலீஸாரின் முதல் அறிக்கையின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதி ஒன்றை நீதிமன்றத்தின் மொழியும் எனது தாய் மொழியுமான தமிழ் மொழியில் எனது சட்டத்தரணிக்கு வழங்க அனுமதிக்க வேண்டும்" என்று விண்ணப்பித்தார்.

அதனை அடுத்துச் சட்டத்தரணி சிவபாலன், "சந்தேக நபர் கைது செய்யப்பட்ட போது அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் அவருக்கு எந்த ஒரு மொழியிலும் தெரிவிக்கப்படவில்லை. அவரைக் கைது செய்தது பற்றிய தகவல் அவரின் உறவினர்களுக்கு அறிவிக்கப்படவும் இல்லை" என்று தெரிவித்தார்.

சந்தேக நபருக்கு அவர் கைது செய்யப்பட்டது பற்றிய முதல் அறிக்கையை தமிழ் மொழியில் வழங்க வேண்டும் என மன்று உத்தரவிட வேண்டும் என்றும் சட்டத்தரணி சிவபாலன் விண்ணப்பித்தார்.

அதற்கிணங்க முதல் அறிக்கையின் தமிழ் மொழிப் பிரதி ஒன்றைச் சந்தேக நபருக்கு வழங்கும்படி நீதிவான் சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்தார்.

சநதேக நபரை ஏப்ரல் 27ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (க)

# பயணப் 'பாஸ்' நடைமுறை உடன் நீக்கப்பட வேண்டும்

## ஈ.பி.டி.பி. எம்.பி தவராஜா கோரிக்கை

கொழும்பு,மார்ச்22

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்கும் வெளியிடங்களிலிருந்து யாழப்பாணத்துக்கும் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறும் நடைமுறையை உடன் நிறுத்த வேண்டும் என்று ஈ.பி.டி.பி. யின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன் வைத்தார்.

இந்தக் கூட்டத்தில் முப்படைத் தளபதிகள், பொலீஸ்மா அதிபர், கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, ஜோசப் பரராஜசிங்கம், சிவமகாராஜா, செல்வராஜா மற்றும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

தவராஜா எம்.பி மேலும் தெரிவித்தாவது:-

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறும் நடவடிக்கையால் ஒருவித பயனும் இல்லை. இதனால் இடைத்தரகர்கள் மட்டுமே பயன்பெறுகின்றனர். பாதுகாப்பு அனுமதி பெறும் விடயத்தில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று கூறினார்.

குடாநாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கென்று மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டும் என்று மாவை சேனாதிராஜா கோரிக்கை விடுத்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், கடற்றொழில் மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து மீனவர் பிரதிநிதிகளுடன் விரைவில் மாநாடு ஒன்றை நடத்துவதாகத் தெரிவித்தார்.

மாநாட்டுக்கான திகதியை இரு அமைச்சர்களும் கலந்தாலோசித்த பின்னர் எடுப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வலி. வடக்கு மக்களின் மீள் குடியமர்வு விவகாரம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (ம)

# கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கோழிகளுடன் ஒரு நரகப் பயணம்!

## பி.பி.ஸி.செய்தியாளருக்கு புதுமையான அனுபவம்

**லண்டன் பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் பிரான்ஸிஸ் ஹரிஸன் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். குடாநாட்டின் பல இடங் களுக்கும் சென்ற அவர் நிலைமைகளை நேரில் அவதானித்தார். பிரமுகர்களுடனும், பொது மக்களுடனும பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினார்.**

**குடாநாட்டுக்கான தனது விமானப் பயணம் குறித்து பி.பி.ஸி செய்திச் சேவைக்கு அவர் அனுப்பி வைத்த குறிப்பு பி.பி.ஸி. தமிழோசையில் ஒலிபரப்பானது. அதன் தொகுப்பு இங்கு தரப்படுகிறது.**

கோழிகளுடன் அதுவும் உயிருடன் உள்ள கோழிகளுடன் பயணம் செய்வது எனக்கும் பழக்கமானது அல்ல. இந்த முறை கோழிகளும் என்னுடன சக பயணிகளாகப் பயணம செய்தன. ஏனைய பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களை உணராது பயணம் முழுவதும் அவை கூவிக் கொண்டே வந்தன.

யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கான விமான 'ரிக்கெற்' என் கைகளில் கிடைத்த போது அந்த ரிக்கெற்றில் 'ஹெறலி ருர்ஸ்'- நரகப் பயணம் - என்று குறிப்பிடப்பட்டிருந்தது போன்று எனக்குத் தோன்றியது. இந்த நரகப் பயணத்தின் அரைவாசித் தூரம் சென்றதும்தான் அது 'ஹெறல் ருர்ஸ்' அல்ல 'ஹெறலி ருர்ஸ்'- ஹெறலிப் பயணம்-என்பதை உணர்ந்தேன்.

விமானம் ஏறுவதற்காக பயணிகள் கூடும் இடத்தைத் தேடி நானும் எனது ஒளிப்பதிவாளரும் அதிகாலை மங்கிய உயர் இருளில் அதி உயர் பாதுகாப்பு வலயமான கொழும்பு நகரைச் சுற்றி வந்தோம. ஒரு வழியாக இடத்தைக் கண்டு பிடித்து அந்த இடத்தில் காத்திருந்தோம்; காத்துக் கொண்டேயிருந்தோம்.

ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் விமானப் படை அதிகாரிகள் சிலர் வந்தனர். பின்னர் பயணிகளின் உடமைகளைச் சோதனையிடுவதற்காக. வெறிச்சோடிக் கிடந்த கார் 'பார்க்' ஒன்றுக்குள் ஒவ்வொருவராகக் கூட்டிச் செல்லப்பட்டோம்.

பயணிகள் கொண்டு வந்த பொதிகள், பெட்டிகளில் இருந்த பொருள்கள் அனைத்தும் வெளியே எடுத்துப்போடபபட்டன. நான் கவனமாக மடித்து 'அயர்ன்' பண்ணி வைத்த ஆடைகள் கலைக்கப்பட்டன. மருந்துப் போத்தல்கள் திறக்கப்பட்டன. ஆவணங்கள், பததிரங்கள் வாசிக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளில் மேலும் ஒரு மணி நேரம் கழிந்தது.

பின்னர் நாங்கள் பஸ் ஒன்றில் ஏற்றப்பட்டு இராணுவ விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு இறக்கப்பட்டதும் மீண்டும் சோதனையிடப்பட்டோம். பொருள்களின் நிறையும் கணிக்கப்பட்டது.

ஒவ்வொரு பயணியும் தனது கைப்பை உட்பட 15 கிலோ நிறையுடைய பொருள்கள் மட்டுமே கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதில எனக்கொரு பிரச்சினை, எனது 'கமெரா'க் கருவிகளே 15 கிலோவுக்கும் அதிகம். இந்தச் சோதனைக்குப் பின்னர் இன்னோர் பஸ் பயணம்.

**தொகுப்பு: அன்ரன்**

மீண்டும் பஸ்ஸில் இருந்து இறக்கப்பட்டு மீண்டும் சோதனை, நிறை பார்த்தல் என்பன இடம்பெற்றன. இந்த நேரத்தில் அங்கு உண்பதற்கு உணவோ குடிபபதற்கு தண்ணீரோ இல்லை. கழிப்பிட வசதிகளும் கூட இல்லை.

நட்பு மனப்பான்மையுடைய பிரிகேடியர் ஒருவருடன் அவசரமாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பின்னர் கூடுதல் நிறையை எடுத்துச் செல்ல எனக்கு அனுமதி வழங்கப்பட்டது. கூடுதலான நிறைக்குரிய கட்டணத்தைச் செலுத்துவதற்காக பின்புறமிருந்த அறை ஒன்றுக்கு நான் அழைத்துச் செல்லப்பட்டேன். ஆயிரக்கணக்கில் பணம் கை மாறியது.

ரயில், வீதி ஆகிய எந்தவிதப் பயணப்பாதையும் இன்றித் துண்டிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்துக்கு வர்த்தகர்கள் தமது பொருள்களை விமானம் மூலம் அனுப்புகின்றனர். இதில்தான் என் சக 'பயணி' களான கோழிகளும் இருந்தன. அதாவது கோழிகளுக்கும் விமானப் பயணம்.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு மணி நேரம்தான் விமானப்பயணம். ஆனால் எங்களது முழுப் பயணத்துக்கும் 12 மணி நேரம் பிடித்தது. அதற்குள் 6

### தமிழ் - சிங்கள மக்களுக்கு இடையே பிளவு விரிவடைவதில் வியப்பில்லை

தடைவைகள் பஸ் பயணமும் அடங்கும்

பொது மக்களுக்கான போக்குவரத்து என்று இராணுவம் கூறும் பயணத்தில் எனது முதல் அனுபவம் இது தான்.

உள்ளூர் தமிழ் மக்களின் உள்ளங்களையும் இதயங்களையும் இது வெற்றி கொள்ளும் எனக் கருதப்பட்டால் அது தோல்வியிலேயே முடியும்.

**சுமுகமான உறவு இல்லை**

பெரும்பான்மையினரான பாதுகாப்புப் படையினர்களுக்கு தாங்கள் பாதுகாப்பதாகக் கூறிக் கொள்ளும் மக்களுடன் சுமுகமான உறவுகள் எதுவும் இல்லை என்றே தெரிகிறது. மூதாட்டி ஒருவருக்கோ, தள்ளுவண்டியில் குழந்தையை வைத்துச் சிரமப்பட்டு அதனைத் தள்ளிக் கொண்டு வந்த தாய்க்கோ ஒரு படைச் சிப்பாய் கூட உதவ முன்வரவில்லை.

விமான நிலையத்தில் படையினரும் பொது மக்களும் வெவ்வேறு பக்கங்களில் அமர்ந்திருந்தனர். ஒருவரை ஒருவர் பார்க்கக் கூட இல்லை.

வடக்கில் பெரும்பாலும் மக்களுக்கும் படையினருக்கும் பேசுவதற்கு எந்தவொரு பொது மொழியும் கிடையாது. யாழ்ப்பாணத்தில் இராணுவம் தனது பணிகளை மேற்கொள்ள அதிகாரபூர்வமான மொழி பெயர்ப்பாளர்களைக் கடமைக்கு அமர்த்த வேண்டிய நிலையே உள்ளது.

இப்படிப்பட்டதோர் நிலையில் சாதாரண சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான பிளவு விரிவடைந்து வருவதில் வியப்பில்லை. இந்தப் பிளவு எந்தளவு என்றால் -

யாழ்ப்பாணத்தில் எங்களுடன் பணிபுரிந்த தமிழ்ப் பத்திரிகையாளர்கள் எனது சிங்கள ஒளிப்பதிவாளரிடம் எவ்வளவு காலமாக இலங்கையில் இருக்கிறார், வசிக்கிறார் என்று கேட்டதற்கு அவர் தான் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர் என்று கூறினார். ஆனால் அவர் சிங்களவர் எனபது அவர்களுக்கு மெல்ல மெல்லப் புரிநதது.

யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட போது - அதாவது யாழ்ப்பாணம் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட போது- தான் யாழ்ப்பாணம் வந்ததாக எனது ஒளிப்பதிவாளர் அவர்களிடம் கூறினார்.

ஆனால் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்டது என்று கூறும் போது அது விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதைக் குறிக்கின்றது என்பதை நான் அவதானித்தேன்.

ஆனால் இந்தப் பிளவு வார்த்தைகளுக்கும் மொழிக்கும் அப்பாற்பட்டது. யாழ்ப்பாண மக்கள் புலிகளைப் 'பெடியன்கள்' என்கின்றனர். பெரும்பாலான தமிழ் மக்கள் புலிகளின் ஈவு, இரக்கமற்ற வழிமுறைகளை ஆதரிக்காவிட்டாலும் அவர்களின் அரசியல் இலட்சியங்களை ஆதரிக்கின்றனர் என்பது வெளிப்படை.

எவ்வாறெனினும் இரு சமுதாயத்தினருக்கும் பொதுவான ஒரு விடயமும் இருக்கின்றது. இந்தப் போருக்கு ஒரு முடிவு ஏற்பட வேண்டும் என்ற விருப்பம் அது.

**சமாதானத்தை விரும்பும் மக்கள்**

யாழ்ப்பாணத்தில் யாரைச் சந்திததாலும் அது குடும்பத் தலைவிகளாக இருந்தாலும் சரி, ஓட்டோச்சாரதிகளாக இருந்தாலும் சரி பல்கலைக்கழக பேராசிரியர்களாக இருந்தாலும் சரி அனைவருமே அமைதி வேணடும், சமாதானம் வேண்டும் என்று ஆத்மபூர்வமாக விரும்புகின்றனர். சமாதானம் வரும் என்று நினைக்கிறீகளா என்று என்னைப் பார்த்துக் கேட்கின்றனர்.

இராணுவத்தினர் கூட தமது சீருடைகளைக் களைந்து தத்தம் வீடுகளுக்குப் போக விரும்புவதாகவே கூறுகின்றனர்.

இதில் பிரச்சினைக்குரியவர்கள் யார் என்றால் கொழும்பில் இருந்து கொண்டு போரின் பாதிப்புகளில் இருந்து தம்மை நன்றாகப் பாதுகாத்துக் கொண்டு போரை நடத்திக் கொண்டு இருக்கும் அதிகாரவர்க்கத்தினர்தான். அவர்கள் 'ஹெறலி ருர்ஸில்' ஒரு பயணம் மேற்கொண்டால் நன்றாக இருக்கும். ★


# பாதீனியத்தின் ஆ

## 1. அறிமுகம்:-

பாதீனியத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் இரு கட்டுரைகள் "உதயன்" வாயிலாக வழங்கப்பட்டன; "சுடர் ஒளி" ஆதரவுடன் ஒரு கருத்தரங்கமும் நடத்தப்பட்டது. பொதுவாகப் பாதீனியத்தைத் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புத் தரப்பட்டது. பாதீனியம் தொடர்பான அறிவு மலர்ச்ச வேகத்தைக் காட்டிலும் வேகமாகப் பாதீனியம் பரம்பியுள்ளது. யாழ்.குடாநாடு முழுவதும் பரவியுள்ளது எனக் கொள்ளலாம். பல இடங்களில் இது ஆட்சியுள்ளதாக மாறியுள்ளது. அழிக்கப்பட்ட இடங்களிலும் துளிர்த்துப் பெருகுகின்றது. இதை முற்றாக அழிப்பது வேறு விடயம், முதலில் கட்டுப்படுத்த முற்பட வேண்டும். இதை எங்ஙனம் கட்டுப்படுத்தலாம் என்ற சில வழிமுறைகளை நாம் குறிப்பிட்டிருந்தோம், "பிறப்புரிமை மூலவள நிலையத்துக்கும்" (GENETIC RESOURCES CENTRE, PERADENIYA) அறிவித்திருந்தோம், அதையே சிபாரிசு செய்து "தாவர பாதுகாப்புச் சேவையினர்" (PLANT PROTECTION SERVICE, PERADENIYA) யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்கள்.

### பாதீனியத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள்:-

மனிதனாற்றான் பாதீனியம் இங்கு புகுத்தப்பட்டது, அதனால் அதைக்கட்டுப்படுத்துவதற்கு மனிதனே நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இயற்கையின் போக்கில் விடலாம். இயற்கையாக ஒரு சமநிலை ஏற்படலாம். அதற்குக் கால தாமதமாகும். இதற்கிடையில் உள்நாட்டுத் தாவர இனங்கள் பல நலிவடைந்து மறையலாம். பாதீனியம் வாழ்க்கைப் போரில் வெற்றி கண்டு தூய பாதீனிய நிற்கைகளே எஞ்சியும் இருக்கலாம். எதுவும் நிகழலாம். மேலும் பாதீனியம் இயற்கையாகப் புகுந்த ஒரு தாவரமல்ல, மனிதனால் புதிய சூழலில் புகுத்தப்பட்ட ஒரு பிறநாட்டுத் தாவரம் (EXOTIC), புகுத்தப்பட்டதனால் ஏற்படும் பலாபலன்களுக்கு மனிதனே காரணம். அதனால் அவனே பரிகாரமும் தேடவேண்டும்.




படம் 1: பாதீனியத்தின் குழாய்ச் சிறுபூ.

பாதீனியத்தைக் கட்டுப்படுத்த முற்படும்போது சூழலுக்கோ, பிற தாவர விலங்கினங்களுக்கோ பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். உயிர் பல்வகைமையை (BIODIVERSITY)ப் பொறுத்தவரை இலங்கை முன்னணியில் இருக்கும் ஒரு நாடு, குடாநாடும் உயர்ந்த உயிர்ப் பல்வகைமையையுடையது. மேலும் பரவலாகக் காணப்படும் தாவர இனங்களில் பல அருமையான மூலிகைத் தாவரங்களுமுண்டு. மேலும், நமது பிரதேசத்திற்குரிய சில தாவர விலங்கினங்கள் இப்பொழுது அருகி வருகின்றன. எமது

| இடம் | ஒரு தாவரத்துக் குரிய பூந்துணர் களின் எண்ணிக்கை | ஒரு பூந்துணருக்குரிய கனிகளின் எண்ணிக்கை, 5 பூந்துணர்களில் பெறப்பட்டவை |
|---|---|---|
| கோண்டாவில் | 66 | 72, 60, 55, 97, 92. |
| | 235 | 96, 18, 88, 44, 66. |
| | 248 | 88, 66, 44, 32, 18. |
| | 33. | 112, 72, 66, 44, 90. |
| | 148 | 66, 172, 66, 120, 36. |
| சங்கானை | 386 | 96, 72, 112, 66, 72. |
| | 98 | 98, 86, 42, 16, 126. |
| | 372 | 32; 92, 66, 88, 110. |
| | 232 | 110, 22, 96, 88, 66. |
| | 128 | 122, 112, 96, 66, 124. |
| மருதனார்மடம் | 1362 | 52, 72, 49, 147,-96. |
| | 2842 | 76, 40, 99, 120, 142. |
| | 167 | 22, 14, 112, 96, 84. |
| | 1026 | 72, 46, 112, 32, 190. |
| | 1400 | 55, 30, 70, 12, 96. |
| நல்லூர் | 647 | 126, 122, 110, 99, 94. |
| | 812 | 112, 96, 96. 72, 64. |
| | 3202 | 40, 52, 60, 72, 40. |
| | 1242 | 126, 72, 96, 88, 96. |
| | 820 | 126, 120, 96, 84, 110. |
| இருபாலை | 786 | 86, 72, 52, 55, 92. |
| | 992 | 90, 24, 12, 37, 96. |
| | 1127 | 112, 67, 90, 72, 55. |
| | 1312 | 192, 99, 62, 50, 76. |
| | 426 | 126, 67, 112, 92, 84. |

*அட்டவணை 3:* ஐந்து இடங்களில் பெறப்பட்ட தாவரங்களில் உள்ள பூந்துணர்களின் எண்ணிக்கைகளும், பெறப்பட்ட பூந்துணர்களில் உள்ள கனிகளின் எண்ணிக்கைகளும். தரவுகள் முழுவதும் நெறிப்படுத்தி அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

நடவடிக்கைகள் இதனைத் துரிதப்படுத்துவதாக அமைந்துவிடக்கூடாது. தாவர இனப்பல்வகைமை (PLANT SPECIES DIVERSITY) அதிகமாகவிருந்தால் சூழல்சமநிலையில் உண்டு என்று கொள்வார்கள். இதை நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

பின்வரும் அழிக்கும் முறைகளால் பாதகமான விளைவுகள் ஏற்படும். மண்வெட்டியால் சிறாய்த்து அகற்றும் போது, ஏனைய தாவரங்களும் அகற்றப்படுகின்றன. மேலும் வெட்டுக் கட்டைகளிலிருந்தும், சிறிய தண்டுத்துண்டுகளிலிருந்தும் பாதீனியம் முளைக்கக் கூடியது. முளைத்து ஏனைய தாவரங்களின் போட்டியின்றிப் பெற்றுப் பெருகி வளரும். களை வெட்டி அகற்றப்பட்ட இடங்களில் இதைக்



*புகைப்படம் 1:* பாதீனியத் தாவரத்தில் பூந்துணர்களின் எண்ணிக்கை பெறப்படுகின்றது.

கண்கூடாகக் காணலாம்.

பயிர் செய்யாத இடங்களில் மருந்து தெளிப்பதனால் பல பயனுள்ள தாவரங்கள், மூலிகைத தாவரங்கள், கால்நடை உணவாகப் பயன்படும் தாவரங்கள், மூடு தாவரங்கள் அழிந்து போகலாம். உணவுச் சங்கிலிகள் ஊடாக பல விலங்கினங்களும் பாதிப்படையும். இதனால் நன்மையைக் காட்டிலும் தீமை விஞ்சுவதற்கு வாய்ப்புண்டு. சூழலும், நீர் நிலைகளும் அழுக்கடைய வாய்ப்புண்டு.

பாதீனியத்தை எங்ஙனம் கட்டுப்படுத்துவது? எமது முன்னோர்கள் களையகற்றுவதற்குக கற்றுத் தந்த முறை தான் சிறந்த முறை. அதாவது பிடுங்கி, எரித்து, அழிப்பது. கையுறையையோ அல்லது கால்மேசு அல்லது பொலித்தீன் பையை கையுறையாகவோ பயன்படுத்தலாம். மூக்கையும் வாயையும் மூடி ஒரு சுத்தமான துணியினால் கட்டிவிடுவதும் நல்லது. (பீடை நாசினிகள் தெளிக்கும் போது கட்டுவது போல). பாதீனியம் கட்டுப்பாட்டுக்கு வரும் வரை, இதைத் தொடர்ந்து செய்ய வேண்டும். பூக்கும் பருவத்திற்கு முன் பிடுங்கி அழிப்பது நல்லது. பாதீனியம் காணப்படுமிடமெல்லாம் அதைப் பிடுங்கி எரித்துவிட வேண்டும் அல்லது அது சுலபமாகவும் வேகமாகவும் ஏனைய இடங்களுக்கும் பரவிவிடும்.

***தாவரப் பாதுகாப்பு சேவையினர் தந்த சிபாரிசுகளையும் கவனிப்போம்:***

i. கமக்காரர்களுக்கு இக்களை (பாதீனியம்) தொடர்பான விழிப்புணர்வைத் தூண்டுவது அவசியம்.

ii. இககளையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேர்ந்து பிடுங்கி அழிப்பதே (தீயிடுதல்) சிறந்த வழி. தாவரம் பூக்குமுன் இதைச் செய்வது சிறந்தது.

iii. தாவரம் பல சந்தர்ப்பங்களில் முளைத்து பல சந்ததிகளைத் தோற்றுவிக்கும் வாய்ப்பு இருப்பதனால் தொடர்ந்து கட்டுப்பாட்டு முயற்சிகளில் ஈடுபடுவது அவசியம்.

iv. தேர்ந்து பிடுங்குவதற்கு ஏற்றதாகத் தரைத் தோற்றம் இல்லாத இடங்களில் "கிளை போல் சூல்" (GLYPHOSULE) என்ற களை நாசினியைப் பயன்படுத்தலாம். களை மிக அடர்த்தியாக உள்ள, பிரச்சினைக்குரிய தரைத்தோற்றம் (UNFRIENDLY TERRAIN) உள்ள இடங்களிற்றான் களை நாசினியைப் பயன்படுத்த வேண்டும். (இத்தகைய இடங்கள் குடாநாட்டில் இல்லை.)

ஊர் மக்கள் சேர்ந்து சிரமதான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதே சிறந்த முறை. வழிகாட்டலுக்கு உரியவர்களை நாடலாம். பாதீனியத்தை கண்ட இடத்திலேயே பிடுங்கி எரிப்பது பலன் தரும். பாதீனியம் தொடர்பாக அண்மையில் நாம் மேற்கொண்ட ஆய்வுகளில் திடுக்கிடும் தகவல்கள் கிடைத்துள்ளன. அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விளைகின்றோம். பாதீனியத்தின் ஆதிக்கத்தை புரிந்துகொள்ள இது உதவும்.


## 2. இனப்பல்வகைமையில் பாதீனியத்தின் ஆதிக்கம்:

பாதீனியம் விரைவாகவும் சுலபமாகவும் அதிக எண்ணிக்கையில் பரவி, வேகமாக ஆதிக்கத்தை மேற்கொள்வதனால், உள்நாட்டிற்குரிய பிற இனங்களைக் கட்டுப்படுத்தி காலப்போக்கில் மறையவும் செய்யலாம். ஆண்டுக்குக் குறைந்தது மூன்று சந்ததிகளைத் தோற்றுவிப்பதனால் பாதிப்பின் தாக்கம் மேலும் அதிகமாகின்றது. மேலும், பாதீனியத்தின் வேர், இலை, பூ, கனி ஆகியவற்றிலிருந்து தோன்றும் கசிவுகளும் (EXUDATES) நீர்முறையரிப்புகளும் (LEACHATES) பிற தாவரங்களின் முளைத்தலையும், வளர்ச்சியையும், கனிகொள்ளலையும் நிரோதிப்பதனால் பிற தாவர இனங்கள் வாழ்க்கைப் போரில் போட்டியிட முடியாமல் அடங்கி ஒடுங்கிப்போகும். இவை எதிர்பார்க்கக கூடிய விடயங்களே. எனினும் விஞ்ஞான முறையில் இதை ஆராய்ந்து பார்ப்பதற்கு முற்பட்டோம். இதற்கு அளவறி, பண்பறி முறைகளை மேற்கொண்டோம். ஆய்வுகளுக்கென கோணடாவில், சங்கானை, மருதனார்மடம், நல்லூர், இருபாலை ஆகிய ஐந்து இடங்களைத் தெரிவு செய்தோம். ஒவ்வொரு இடத்திலும் பாதீனியம் உள்ள இடமாகவும், அதற்கு அண்டியயதாகவே பாதீனியம் இல்லாத இடமாகவும் பார்த்து ஆய்விடங்களை (PLOTS)த் தெரிவு செய்தோம். ஒவ்வொரு ஆய்விடத்திலும் ஒரு மீற்றர் சதுர நாற்பக்கவுருவைப் பயன்படுத்தி எழுந்தபடியான கணிப்புகளை மேற்கொண்டோம். ஒவ்வொரு இடத்திலும் இருபது எறிகைகள்

| நாற்பக்கவுரு எறினை எண் | பாதீனியம் உள்ள இடம் |
|---|---|
| 1 | 5.2 (5) |
| 2 | 4.8 (5) |
| 3 | 5.8 (6) |
| 4 | 8.4 (8) |
| 5 | 7.6 (8) |
| 6 | 6.6 (7) |
| 7 | 7.4 (7) |
| 8 | 9.2 (9) |
| 9 | 6.2 (6) |
| 10 | 6.6 (7) |
| 11 | 8.4 (8) |
| 12 | 8 |
| 13 | 7.6 (8) |
| 14 | 4.8 (5) |
| 15 | 5.2 (5) |
| 16 | 4.8 (5) |
| 17 | 6.4 (6) |
| 18 | 6.4 (6) |
| 19 | 6 |
| 20 | 4 |

*அட்டவணை 2:* சட்டவரைபடம் அட்டவணை 1இல் உள்ள தரவுகளி சராசரிகள். (தசாம்சங்கள் அண்டிய மாற்றப்பட்டுள்ளன)
*குறிப்பு: சகல இடங்களுக்குமுரிய பொது பாதீனியம் உள்ள இடத்தில் 6.4 பாதீனியம் இல்லாத இடத்தில் - 1*

**4. வரைபடம் 1:** ***பாதீனியத்தின் ஆதிக்கத்தைத் துலாம்ப வரைபடமாக (BAR HISTOGRAM) த***



# ஆதிக்கம்

| ...தீனியம் ...ள்ள இடம் | பாதீனியம் இல்லாத இடம் |
|---|---|
| 2 (5) | 19.4 (19) |
| 8 (5) | 17.2 (17) |
| 8 (6) | 20.4 (20) |
| 4 (8) | 14.5 (15) |
| 6 (8) | 17.4 (17) |
| 6 (7) | 14.8 (15) |
| 4 (7) | 19 |
| 2 (9) | 19.8 (20) |
| 2 (6) | 16.4 (16) |
| 6 (7) | 17.2 (17) |
| 4 (8) | 17.8 (18) |
| | 17.6 (18) |
| 6 (8) | 15.8 (16) |
| 3 (5) | 15 |
| 2 (5) | 16.8 (17) |
| 3 (5) | 16.2 (16) |
| 4 (6) | 17.8 (18) |
| 4 (6) | 17.8 (18) |
| | 17.8 (18) |
| | 13.6 (14) |

...வரைபடம் தயாரிப்பதற்காக ...தரவுகளிலிருந்து பெறப்பட்ட ...ள் அண்டிய முழு எண்களாக

...ுரிய பொதுவான சராசரிகள்: ...த்தில் 6.4 ம் 6. ...டத்தில் - 17.1 ம் 17.

மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு எறிகையின் போதும் நாற்பக்கவுரு விழுந்த இடத்தில் பாதீனியம் தவிர்ந்த ஏனைய இனங்களின் எண்ணிக்கை எடுக்கப்பட்டது. தரவுகள் முழுமையாக, ஒரே பார்வையில் இன எண்ணிக்கையில் பாதீனி யத்தின் ஆதிக்கத்தை அறிய உதவும் வகையில், அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்.)

பாதீனியம் உள்ள இடங்களில் பிற இனங்களின் எண்ணிக்கை பூச்சியத்தில் இருந்து பதினேழு வரை வியாபித்திருப்பதைக் காணலாம். பிற இனங்களின் எண்ணிக்கைக்கும் பாதீனியத்தின் அடர்த்திக்கும் உள்ள தொடர்பு ஆய்வுகளின் போது புலப்பட்டது, அதாவது பாதீனியத்தின் அடர்த்திக்குத் தக்கதாக பிற இனங்களின் தொகை நேரடி விகிதா சாரத்தில் வீழ்ச்சியடைந்திருப்பது புலப்பட்டது. பாதீனியம் இல்லாத இடங்களில் பிற இனங்களின் தொகை வீச்சு ஆறிலிருந்து முப்பத்தியாறு வரை இருப்பது புலனாயிற்று. சில இடங்களில் தொகை குறைவாக இருப்பதற்கான காரணம் மண்ணிலைக் காரணிகளும், தரையியல்பும், பிறசூழல் இயல்புகளுமாகும்.

பாதீனியத்தின் ஆதிக்கத்தைத் துலாம்பரமாகக் காட்டும் வகையில் சட்ட வரைபடம் (BAR HISTOGRAM) தரப்பட்டுள்ளது. (சட்டவரைபடம் 1) சட்டவரை படம் தயாரிப்பதற்காகப் பெறப்பட்ட சராசரி அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளன: தரவுகள், குடாநாட்டில் தாவர இனப் பல்வகைமை உயர்வாகவுள்ளது என்பதனையும், பாதீனியம் உள்ள இடங்களின் பிற இனங்களின் தொகையில் ஆதிக்கம் உண்டு என்பதையும் நிறுவுவதற்கு ஆதாரமாக உள்ளது.

## 3. பாதீனியத்தின் கனி கொள்ளல் வீச்சு.

பாதீனியம் மிக அதிக எண்ணிக்கையில் கனிகளை தோற்றுவிக்கும் என்பது தெரியும். தோற்றுவிக்கப்பட்ட கனிகள் மிக சுலபமாக, பெருந்தொகையில், காற்று, நீர், விலங்குகள், பறவைகள், வாகனங்கள் வாயிலாக பரவப் படும் என்பதும் தெரியும். ஆனால் ஒரு தாவரம் எவ்வளவு கனிகளைத் தரும் என்பதில் கருத்து வேறுபாடுகள் உண்டு. ஒரு தாவரம் ஆயிரக்கணக்கில் பூந்துணர்வுகளைத் தோற்றுவிக்கும் என்றும், ஒவ்வொரு பூந்துணரிலும் இரண்டு தொடக்கம் மூன்று ஆயிரம் விதைகள் உண்டு என்பதும் மக்டொான் ஜெகசூரியாவின் (MAGDON JAYASURIYA, PLANT GENETIC RESOURCES CENTRE, PERADENIYA) கணிப்பு. ஒவ்வொரு தாவரமும் சராசரியாக ஏழாயிரம் (7000) கனிகளைத் தோற்றுவிக்கும் என்பது றாவ் வின் கணிப்பு (V.C.R RAO, PRINCIPLES OF WEED SCIENCE). இக்கணிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையாக இல்லை. அதனால், இங்கு இப்பொழுது பாதீனியம் கிடைக்கின்ற காரணத்தினால் நேரடியாக ஆய்வுகளை மேற்கொண் டோம். (புத்தகங்களிலிருந்து பெறும் தகவல்களைக் காட்டிலும் நேரடியாக அங்கிகளிலிருந்து பெறும் தகவல்கள் சிறந்ததாக அமையும்.)

ஆய்வு மேற்கொண்ட ஐந்து இடங்களில் இருந்தும்,



புகைப்படம் 2: பாதீனியம் பூந்துணர் நுணுக்குக் காட்டியின் கீழ் பிரிக்கப்பட்டு கனிகள் எண்ணப்படுகின்றன.

ஒவ்வொரு இடத்திலும் எழுந்தபடியாக ஐந்து தாவரங்கள் சேகரிக்கப்பட்டு தனியாகப் பொதி செய்யப்பட்டது. இங்ஙனம் சேகரிக்கப்பட்ட தாவரங்களின் முழு எண்ணிக்கை இருபத்தைந்து (25) ஒவ்வொரு தாவரத்திலும் பூந்துணர்களின் எண்ணிக்கை எடுக்கப்பட்டுக் குறித்துக் கொள்ளப்பட்டது. பின்னர் ஒவ்வொரு தாவரத்திலிருந்தும் ஐந்து பூந்துணர்கள் எழுந்தபடியாக எடுக்கப்பட்டு கனிகளின் எண்ணிக்கை தனித்தனியே எடுக்கப்பட்டது. இங்ஙனம் எண்ணப்பட்ட பூந்துணர்களின் எண்ணிக்கை நூற்றியிருபத்தைந்து (125) ஆகும். முழுமையான தரவுகளுக்கு அட்டவணை 3ஐப் பார்க்கவும்.

பூந்துணர்களின் எண்ணிக்கை 33இல் இருந்து 3202 வரை வியாபித்திருப்பதைக் காணலாம். பூந்துணருக்குரிய கனிகளின் எண்ணிக்கை 12ல் இருந்து 192 வரை வியாபித்துள்ளது (ஆயிரக் கணக்கில் எதிலும் இல்லை).

ஒரு தாவரத்துக்குரிய பூந்துணர்களின் சராசரி எண்ணிக்கை (முழுத் தொகையிலிருந்தும் கணிக்கப்பட்டது) - 618.5 அதாவது 619.

ஒவ்வொரு பூந்துணருக்குரிய கனிகளின் சராசரி எண்ணிக்கை (முழுத்தொகையிலிருந்தும் கணிக்கப்பட்டது) - 80.2 அதாவது 80.

அதனால் ஒரு தாவரம் தோற்றுவிக்கும் கனிகளின் சராசரி எண்ணிக்கை - 169 x 80 = 49520.

பாதீனியத்தின் வாழ்க்கை வட்டம் ஆண்டுக்கு மூன்று தலைமுறைகள் (குறைந்தது). அதனால் ஆண்டொன்றுக்கு ஒரு தாவரத்தினால் தோற்றுவிக்கப்படும் கனிகளின் சராசரி எண்ணிக்கை - 49520 x 3 =138560.

இங்ஙனம் ஆண்டொன்றுக்குப் பத்துத் தாவரங்களினால் தோற்று விக்கப்படும்கனிகளின சராசரி எண்ணிக்கை - 138560 x 10= 1385600.

இப்படியே நூறு, ஆயிரம் என்று தாவர எண்ணிக்கைகளுக்குக் கணக்குப் போட்டுப் பாருங்கள், தலையைச் சுற்றுகிறதா! இப்போது பாதீனியத்தின் ஆதிக்கம் புலப்படுகிறதா?


*குறிப்பு:- எண்ணிக்கைகள் யாவும் ஆய்வுகூடத்தில் அவதானமாக, உரிய தற்காப்பு முறைகளுடன் மேற்கொள்ளப்பட்டன. கனிகளின் எண்ணிக்கை முப்பரிமாண நுணுக்குக்காட்டி (STERIO MICROSCOPE) யின் கீழ் மேற்கொள்ளப்பட்டன (புகைப் படங்களைப் பார்க்கவும்).*

## 4. பாதீனியத்தில் ஆண் பூக்கள் உண்டா?

மாண்டல் (R.C MANDAL - WEED, WEEDICIDES AND WEED CONTROL) பாதீனியத்தில் ஒவ்வொரு பூவடியிலையுடனும் தொடர்பாக ஒரு பெண் பூ உண்டெனவும், ஒவ்வொரு பெண் பூவின் இரு பக்கங்களிலும் இரு ஆண் பூக்கள் உண்டெனவும் குறிப்பிடுகின்றார். இது மயக்கத்தை தருவதாக இருக்கின்றது. பாதீனியம் கொம்போசிற்றே/அஸ்ரேசீ (COMPOSITAE/ASTERACEAE) குடும்பத்திற்குரியது. கொம்போ சிற்றேயில் ஆண் பூக்கள் இருப்பதாக நாம் அறியவில்லை. இக்குடும்பத்தில் இரு வகையான சிறு பூக்கள் உண்டு, அவையாவன கதிர்ச்சிறு பூக்களும் (நாவுருச் சிறுபூக்கள்), குழாய்ச் சிறுபூக்களும் (வட்டத்தட்டுச் சிறு பூக்கள்) ஆகும்.

K,S,KUGATHASAN M.Sc.
PRESIDENT, FIELD WORK CENTRE.
MRS.J.NANDHAKUMAR M.PHIL.
SENIOR LECTURER, DEPT. OF BOTANY,
UNIVERSITY OF JAFFNA.
K.SUGANTHAN B.Sc.
DEPT. OF BOTANY, UNIVERSITY OF JAFFNA.

குழாய்ச் சிறுபூக்கள் எப்பொழுதும் இருபாலுள்ளவையாகவிருக்கும். கதிர்ச்சிறுபூக்கள் ஒரு பாலுள்ளவையாகவோ (பெண் பூக்கள்), இருபாலுள்ளவையாகவோ இருக்கும். சிறு பூக்களின் அடிப்படையில் கொம்பசிற்றே மூன்று கூட்டங்களாக வகுக்கப்படும். பூந்துணர்களில் கதிர்ச்சிறு பூக்களையும் (ஒரு பாலான பெண் பூக்கள்), குழாய்சிறு பூக்களையும் உடையவை. மித்தே (MIXTAE) கூட்டத்திற்குரியவை. (உ-ம்: சூரியகாந்தி, பாதீனியம்) இருபாலுள்ள குழாய்ச் சிறுபூக்களை மாத்திரம் உடையவை ரியூபுலிபுளோறே (TUBULIFLORAE) கூட்டத்திற்குரியவை. (உ-ம்: சீதேவியார் செங்கழுநீர்); இருபாலுள்ள கதிர்ச் சிறுபூக்களை மாத்திரம் உடயவை லிகுயூலிபுளோறே (LIGULIFLORAE) கூட்டத்துக்குரியவை (உ-ம்: டேலியா, எழுத்தாணிப் பூண்டு). மேலும் பூந்துணருடன் தொடர்பாக வெளிச் சுற்றுக்களாக ஒன்றோ அல்லது பலவோ எண்ணிக்கையில், பாளைச்சுற்றுக்களாக பூவடியிலைகள் காணப்படும்; அகத்தே பரவலாக சிறுபூக்களுடன் தொடர்பாக வெளிறிய செதில் போன்ற பூவடியிலைகள் காணப்படும். இவை பாளைகள் எனவும் அழைக்கப்படும். பாதீனியத்தில் ஐந்து பெரிய பூவடியிலைகள் பாளைச் சுற்றைத் தோற்றுவிக்கும். ஒரு சுற்று சிறுபூக்களுடன் தொடர்பாக ஒடுக்கமான ஒப்பீட்டளவில் நெடியதான செதில் போன்ற பூவடியிலைகளும்




படம் 2: பாதீனியத்தின் கதிர்ச் சிறுபூ.


(பாளைகள்) உண்டு. இவையெல்லாம் ஏற்கனவே ஆய்வுகளின் போது அவதானிக்கப்பட்டவை. ஆயினும் ஆண் பூக்கள் உண்டா என்பதனை மீண்டும் பாதீனியத்தில் ஆராய்ந்து பார்த்தோம். எமக்கு அகப்படவில்லை. மாண்டல் பாளைச் சுற்றுக்குரிய பெரிய பாளைகளை பெண் பூக்களுக்குரிய பூ வடியிலைகள் என்றும், சிறிய பாளைகளை ஆண் பூக்கள் என்றும் கொண்டிருக்கலாம். (படங்களைப் பார்க்கவும்.) "பாதீனியத்தின் ஆதிக்கம் தொடர்பாக பொதுமக்கள் நாட்டம் கொள்வதும் நடவடிக்கை எடுப்பதும் அவசியம். எமது சூழலில் வெளியாரின் தலையீடு தடுக்கப்பட வேண்டும்".

| நாற்பக்கவுரு எண் | கோண்டாவில் ① | கோண்டாவில் ② | சங்கானை ① | சங்கானை ② | மருதனார்மடம் ① | மருதனார்மடம் ② | நல்லூர் ① | நல்லூர் ② | இருபாலை ① | இருபாலை ② |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 16 | 7 | 22 | 4 | 24 | 6 | 21 | 3 | 14 |
| 2 | 4 | 19 | 4 | 18 | 6 | 16 | 4 | 17 | 6 | 16 |
| 3 | 12 | 22 | 3 | 16 | 3 | 30 | 2 | 14 | 9 | 20 |
| 4 | 11 | 14 | 12 | 14 | 9 | 18 | 0 | 13 | 10 | 12 |
| 5 | 9 | 12 | 6 | 10 | 11 | 24 | 3 | 20 | 9 | 21 |
| 6 | 10 | 9 | 7 | 24 | 7 | 18 | 2 | 14 | 7 | 9 |
| 7 | 7 | 17 | 13 | 18 | 10 | 36 | 1 | 6 | 6 | 18 |
| 8 | 6 | 16 | 9 | 19 | 9 | 22 | 10 | 22 | 12 | 20 |
| 9 | 5 | 15 | 8 | 21 | 8 | 10 | 2 | 17 | 8 | 19 |
| 10 | 10 | 13 | 6 | 20 | 2 | 14 | 9 | 22 | 6 | 17 |
| 11 | 9 | 12 | 0 | 19 | 12 | 20 | 11 | 14 | 10 | 14 |
| 12 | 8 | 22 | 10 | 22 | 8 | 16 | 7 | 13 | 7 | 15 |
| 13 | 6 | 14 | 7 | 22 | 7 | 12 | 5 | 20 | 13 | 11 |
| 14 | 5 | 16 | 4 | 19 | 6 | 22 | 3 | 9 | 6 | 9 |
| 15 | 12 | 19 | 3 | 16 | 2 | 12 | 2 | 20 | 7 | 17 |
| 16 | 11 | 22 | 1 | 15 | 10 | 14 | 0 | 6 | 2 | 24 |
| 17 | 17 | 19 | 2 | 14 | 11 | 16 | 2 | 22 | 0 | 18 |
| 18 | 9 | 26 | 14 | 10 | 8 | 20 | 0 | 19 | 1 | 14 |
| 19 | 6 | 22 | 9 | 10 | 7 | 20 | 4 | 20 | 4 | 17 |
| 20 | 2 | 17 | 8 | 9 | 6 | 12 | 2 | 14 | 2 | 16 |

*அட்டவணை 1:* ஐந்து இடங்களில் பாதீனியம் உள்ள இடங்களிலும், பாதீனியம் இல்லாத இடங்களிலும், எடுக்கப்பட்ட பிற இனங்களின் தொகைகள் ஒரே பார்வையில் ஒப்பிடுவதற்காக ஒன்றாக நெறிப்படுத்தப் பட்டுள்ளன.

*சாவி: (1) பாதீனியம் உள்ள இடத்தில் பிற இனங்களின் தொகை.*
*(2) பாதீனிம் இல்லாத இடத்தில் பிறஇனங்களின் தொகை.*

*...துலாம்பரமாகக் காட்டுவதற்காக பெறப்பட்ட சராசரிகள் சட்ட...RAM) தரப்பட்டுள்ளது.*




...க்கவுரு எறி எண்
...இனங்களின் எண்ணிக்கை.
...இனங்களின் எண்ணிக்கை.
...ழு இடங்களுக்குமான சராசரி எண்ணிக்கை.
...முழு இடங்களுக்குமான சராசரி எண்ணிக்கை.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## டிஸ் அன்ரனா விற்பனைக்கு

EUROSTAR மொடல், நம்பர் LT 950 GOLD டிஸ் அன்ரனா (8 அடி) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 637, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (85723)

## வீடு வாடகைக்குத் தேவை

உயர்தக ஆசிரியர் குடும்பத்திற்கு சுன்னாகம், மருதனார்மடம், இணுவில், தாவடி, கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: விள.இல.1244, மே/பா. உதயன். (85717)

## இறைச்சிக் கோழி தேவை

இறைச்சிக் கோழி, புறொயிலர், கல்பேட்ஸ், சேவல், என்பன உடன் தேவை. தொடர்பு:- தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை, நல்லூர். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)

(85692)

## விற்பனைக்கு

150 LF வான் கொம்பிரேசர் வாத்து, டீபிறிச் என்ஜின் அத்துடன் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ரவி, K.K.S. வீதி, சுன்னாகம். (85664)

## கடை விற்பனைக்கு

பலாலி வீதி, ஊரெழு கிழக்கில கடையுடன் சேர்ந்து அமைந்துள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (இராசாத்தி கடை, பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) தொடர்பு:- தே.பிரதீபன், கலைவாணி மில் லேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

(85659)

## விற்பனைக்கு

51/2 அடி நீளமும், 21/2 அடி அகலமுமான சில்வர் தகடு உள்ளே அடித்த புதிய டீபிறிச்சும், கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட யமஹா-50 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லிங்கம், மானிப்பாய் வீதி, தாவடி. TP: 2690

(85701)

**14" SONY COLOUR T.V, DECK (Panasonic), ASIA Gents Bicycle** என்பன விற்பனைககுண்டு. தொடர்பு: 39/1, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம்.

(85721)

## பிறிமாக் குஞ்சுகள்

பிறிமா இன வெள்ளை (10 நாள்கள் வளர்ந்தவை), சிவப்பு (3நாள்கள் வளர்ந்தவை) விற்பனைக்குண்டு. தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி அல்லது கிளின் சொட் அருகில், பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (85719)

---

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி
## நீங்காத நினைவில் மார்ச் 23




தோற்றம் 15 - 04 - 1927 | மறைவு 23 - 03 - 1986

மக்கள் எழுத்தாளர்

## அமரர் கே.டானியல்

**சமூகத்தின் மாகொடிய நோயான தீண்டாமைக்கு எதிராக தன் இலக்கியப் படைப்புக்களையும், வாழ்வையும் அர்ப்பணித்தவர்.**

*76/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*

என்றும் நீங்காத நினைவுகளில்
**பிள்ளைகள், மருமக்கள்; பேரப்பிள்ளைகள்.**

(C/15845)

---

# நிக்சன் அதிர்ஷ்ட முதலீட்டுத் திட்டம்

**நண்பர்களுக்கு மட்டும்**

மாதாந்தக் கட்டுப் பணம் ரூபா 500/=. மாதம் மாதம் 15 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.
முதலாவது அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 25000/= உடன் வழங்கப்படும்.
அதிர்ஷ்டத்தின் பின்னர் பணம் கட்டத் தேவையில்லை.
மேலும் (இலவசமாக) 25 பேருக்கு சிறு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.
எதிர்வரும் 25.03.2001ஆம் திகதிக்கு முன்பு பணத்தைக் கட்டிப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளவும்.
மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

## நிக்சன் பல்பொருள் வாணிபம்

(பஸ்நிலையம் முன்பாக)
அச்சுவேலி.

(C/15772)

---

# நன்றி நவில்கின்றோம்

அமரர்

## நாகமுத்து திருநாவுக்கரசு

*(முன்னாள் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் காசாளர்)*

எனது கணவர் அமரர் நாகமுத்து திருநாவுக்கரசு அவர்கள் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலை 7ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்றபொழுது சகல விதத்திலும் உதவிய டாக்டர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய விதத்தில் உதவிகள் வழங்கியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*வட்டு.கிழக்கு,*
*வட்டுக்கோட்டை.*

(C/15841)

**தி.புவனேஸ்வரி**
(மனைவி)

---

# இலங்கை மின்சார சபை
## யாழ்.பிரதேசம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் வளாக வீதியில் உள்ள பிரதான மின்நிலையத்தில் மின்மாற்றிகள் மாற்றவேண்டியிருப்பதனால் பின்வரும் நாள்களில் யாழ்.மாநகரசபை எல்லைக்குள்ளான பகுதிகளுக்கு மின் விநியோகம் தடைப்படும்.

| திகதி | நேரம் | தடைப்படும் பகுதி |
|---|---|---|
| 25-03-01 | காலை 9.00 மணி தொடக்கம் 26-03-01 பிற்பகல் 5.00 மணி வரை | யாழ். மாநகரப்பகுதி |
| 25-03-01 | காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை | யாழ். குடாநாடு முழுவதற்கும் |

வேலைகள் பூர்த்தியடைந்ததும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பதாக மின் வழங்கப்படும் என்பதையும் பாவனையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

இதன் காரணமாக மின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மனம்வருந்துகின்றேன்.

**பிரதேச மின் பொறியியலாளர்,**
*இலங்கை மின்சார சபை,*
*யாழ். பிரதேச அலுவலகம்,*
*சுன்னாகம்.*

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கை கொடுக்கும்"
**இலங்கை மின்சார சபை.**

(C/15842)

---

# காரைநகர்
## திருமணற்காடு அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரியன்னையின்
## தேர் உற்சவ சிறப்பு அம்சம்
## 23-03-2001





### "தேரேறும் தேவிக்கோர் விண்ணப்பம்"

போரை மண்ணில் ஓய வைக்க தேரிலேறி வருக தாயே
புதிய வாழ்வை மலர வைக்க தேரிலேறி வருக தாயே
சேரும் பகையை விலக்கி வைக்க தேரிலேறி வருக தாயே
செல்வ வாழ்வை செழிக்க வைக்க தேரிலேறி வருக தாயே
கோரும் உரிமை கிடைக்க வைக்க தேரிலேறி வருக தாயே
கொள்கை காத்து உழைக்க வைக்க தேரிலேறி வருக தாயே
பாரில் மக்கள் நலனைக் காக்க தேரிலேறி வருக தாயே
பஞ்சம் நாட்டில் தீர்ந்து போக தேரிலேறி வருக தாயே!

நாலு திசையில் பிரிந்தவரை சேர்த்து வைக்க தேரிலேறி வருக தாயே
நல்ல பேச்சை தொடக்கி வைக்க தேரிலேறி வருக தாயே
நீளும் துயரை நாட்டில் நிறுத்தி வைக்க தேரிலேறி வருக தாயே
நிரந்தர தீர்வைத் தந்து காக்க தேரிலேறி வருக தாயே
ஆளும் உரிமை தமிழர் பெறவே தேரிலேறி வருக தாயே
ஆண்டாண்டாய் அநுபவிக்கும் துன்பம் தீர்க்க தேரிலேறி வருக தாயே
சூழ இன்பம் பெருக்கி வாழ வைக்க தேரிலேறி வருக தாயே
சூலம் வாளை கையிலேந்தி துன்பம் போக்க தேரிலேறி வருக தாயே!

**- மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.**

இன்று (2001-03-23) வெள்ளிக்கிழமை நடைபெறும் முத்துமாரியன்னையின் தேர்விழா சிறக்க தாயின் தாள்களைப் பணிந்து தமிழர் வாழ்வில் சாந்தி, சமாதான வாழ்வு மலர அன்னையைப் பிரார்த்திப்பவர்கள் :

**மலர் புடைவையகம்**
18 (67A), பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

**ரூபா பன்முக வர்த்தகம்**
104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/15843)

# பாகிஸ்தானிய ராணுவ அரசால் எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது!

இஸ்லாமாபாத், மார்ச் 23

பாகிஸ்தானிய எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பான ஜனநாயக மீட்புக் கூட்டணியின் 20 முன்னணித் தலைவர்களை பாகிஸ்தான் பொலீஸார் கைது செய்தனர்.

கடந்த 18 மாதங்களாகப் பாகிஸ்தானில் நடைபெற்று வரும் இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, ஜனநாயக அரசொன்றை ஏற்படுத்த ஜனநாயக மீட்புக் கூட்டணி போராட்டங்களை மேற் கொண்டுள்ளது.

பாகிஸ்தானின் தேசிய தினமான இன்று இராணுவ அரசை எதிர்த்து கூட்டணி நடத்தவிருந்த போராட்டத்தை தடுப்பதற்காகவே கூட்டணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கைதான தலைவர்கள் லாகூர் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர்.

## 'இன்ரர்நெற்'றில் காதல் வலைவிரித்து

# இஸ்ரேலிய இளைஞரைக் கொன்ற பலஸ்தீன யுவதி

## தனது செயல் குறித்துப் பெருமிதம்

ஜெருசலேம், மார்ச் 23

இணையத்தளம் மூலம் காதல் வலை விரித்து இஸ்ரேலிய இளைஞரைக் கொன்ற பலஸ்தீனப் பெண் நீதிமன்றத்தில் தனது செயல் குறித்துப் பெருமைப்படுவதாகத் தெரிவித்தார்.

19 வயதான ஒபிர் ரஹ்ம் என்ற இஸ்ரேலிய இளைஞருடன் 24 வயதான அமானிமோனா என்ற பலஸ்தீனப் பெண் இணையத்தளம் ஊடாகத் தொடர்பு கொண்டார். நாளடைவில் மோனா மீது ரஹ்ம் காதல் வசப்பட்டார்.

ரஹ்மை ஜெருசலேம் பஸ் நிலையத்தில் சந்திக்க விரும்புவதாக மோனா இணையத்தளத்தின் மூலம் செய்தியனுப்பினார்.

இதனையடுத்து அங்கு வந்த ரஹ்மை தனது காரில் மோனா ஏற்றிச்சென்றார்.

ரமல்லா நகர் அருகே ஏற்கனவே காத்திருந்த 'பதபாஹ்' தீவிரவாதிகளிடம் ரஹ்ம்மை மோனா ஒப்படைத்தார். அங்கு வைத்து ரஹ்ம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்காக மேற்குக் கரையில் உள்ள இஸ்ரேலிய இராணுவ நீதிமன்றத்துக்கு மோனா, கொண்டு வரப்பட்டார். ரஹ்மின் கொலையில் தான் சம்பந்தப்பட்டிருப்பது குறித்து பெருமைப்படுவதாக அப்போது அவர் தெரிவித்தார்.

## பாதிரிமார் மற்றும் மதபோதகர்களால்

# கன்னியாஸ்திரிகள் மீது பாலியல் துன்புறுத்தல்கள்

## வத்திக்கான் அறிக்கையில் தகவல்

வத்திக்கான், மார்ச் 23

உலகில் சில நாடுகளில் பாதிரிமார்களாலும், மத போதகர்களாலும் கன்னியாஸ்திரிகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப் படுவதை வத்திக்கான் ஒப்புக் கொண்டுள்ளது.

வத்திக்கானின் புனித கட்டளைகள் சமாஜ்ரின் தலைவரும், வைத்திய நிபுணருமான ஓடோவோகு வத்திக்கானின் சார்பில் தயாரித்து கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் கன்னியாஸ்திரிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற சம்பவங்கள் சம்பந்தப்பட்டவர்களின் ஒப்புதல் கையெழுத்துக்களுடன் உறுதிப்படுத்தப்பட்டு அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனினும் எவரது பெயர், விவரங்களும் குறிப்பிடப்பட வில்லை.

அந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளதாவது —

கன்னியாஸ்திரிகளுக்கு அதிகப்பாதுகாப்பான இடமாகக் குறிப்பிடப்படும் ஆபிரிக்க நாடுகளிலேயே அவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகம் இடம் பெறுகின்றன. பாதிரியாரொருவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட கன்னியாஸ்திரி ஒருவருக்கு பலவந்தமாக கருத்தடை மாத்திரை கொடுக்கப்பட்ட சமயம் அந்தக் கன்னியாஸ்திரி உயிரிழந்துள்ளார்.

மடம் ஒன்றில் தங்கியிருந்த 29 கன்னியாஸ்திரிகள் பாதிரியார்களால் பலவந்தப்படுத்தப்பட்டு தாய்மையடைந்துள்ளனர். இது குறித்து மடத்தின் தலைமைக் கன்னியாஸ்த்திரி பிரதேசப் பேராயரிடம் முறையிட்ட போதும் எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை; மாறாக, தலைமைக் கன்னியாஸ்திரி பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

ஆபிரிக்கப் பகுதியொன்றில் பேராயர், பாதிரிமார்களால் கன்னியாஸ்திரிகள் பாலியல் வல்லுறவுகளுக்கு உள்ளாக்கப் பட்டமை குறித்து 1998 இல் தலைமைக் கன்னியாஸ்திரி ஒருவர் வத்திக்கானுக்கு முறைப்பாட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ள அறிக்கை 'ரோம் டெய்லி' என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

(ஓ)

# அ. தி. மு. கவிலிருந்து தாமரைக்கனி நீக்கம்

அ. தி. மு. கவிலிருந்து ஸ்ரீவில்லி புத்தூர்தொகுதிக்கான சட்டசபை உறுப்பினர் தாமரைக்கனி நீக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் நற்பெயருக்கு அவதூறு ஏற்படுத்தியதாகத் தாமரைக்கனி மீது குற்றஞ்சுமத்திய அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா அவரைக் கட்சியில் இருந்து நீக்குவதாக நேற்று அறிவித்தார்.

முன்னதாக எதிர்வரும் சட்ட சபைத் தேர்தலில் போட்டியிட தாமரைக் கனிக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது இதனையடுத்து ஸ்ரீவில்லி புத்தூர்த் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடப் போவதாக தாமரைக்கனி அறிவித்திருந்தார்.

இதனாலேயே அவர் கட்சியைவிட்டு விலக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# வாழ்க்கையில் முன்னேற்றம் காண அறிவினால் உயரும் அடக்கம் தேவை

## அருச்சுனன் அதற்குச் சிறந்த உதாரணம்

மனிதனுடைய நற்குணங்களில் நனி சிறந்து விளங்குவது அடக்கம் என்பது. கல்வி, கேள்வி, செல்வம், குலம், பட்டம், பதவி முதலிய பல இருப்பினும் அடக்கம் என்ற ஒன்று இல்லையானால் அவன் சிறப்படையான்.

ஒரு குழம்பில் புளி, மிளகு, காயம், காரம் என்பன பல இருப்பினும்உப்பு என்ற ஒன்று இல்லையானால் உண்பதற்கு உகந்ததாக ஆகாது. உணவுக்கு உப்பு இன்றியமையாதது போல் வாழ்வுக்கு அடக்கம் இன்றியமையாதது.

திருவள்ளுவர் ,தமது சுருங்கிய நூலில் அடக்கத்திற்கு ஒரு முக்கியத்துவம் தந்து 'அடக்கமுடைமை' என்ற அதிகாரம் அமைத்துப் பத்துக் குறட்பாக்கள் பாடியிருக்கின்றார்.

பணிவு என்ற இந்த அரிய குணம் அநேகருக்கு அமைவதில்லை. பணிவுடையார் தமது வாழ்வில் சிறப்புறுவார்கள்.

தண்ணீர் இறைக்கும் ஏற்றம், பணிவதனால் கிணற்றிலுள்ள நீரை முகக்கின்றது. அங்ஙனம் ஆன்றோர்களிடம் பணிந்தால் அவர்கள் பால் தேங்கிக் கிடக்கும் அறிவு வெள்ளத்தை நாம் முகந்து கொள்ளலாம்.

பணிவதனால் ஒன்றும் நமக்கு இழிவு வந்துவிடாது. அது நமது பெருமையையே புலப்படுத்தும். துலாக்கோலில் தாழ்ந்த தட்டுக்குத்தானே பெருமை? காய்த்துப் பழுத்துப் பயனுடைய மரக்கிளை தாழ்ந்து இருக்கும். காய் கனி இல்லாத கிளைகள் உயர்ந்து நிற்கும். எதற்குப் பெருமை? தாழ்ந்தகிளைக்கா? உயர்ந்த கிளைக்கா? உன்னிப் பாருங்கள்.

### அர்ச்சுனனது அடக்கம்

பாண்டவர்களும் துரியோதனாதியரும் அத்தினபுரத்தில் கிருபாசாரியாரிடம் குருகுல வாசம் புரிந்து கல்வி பயின்று

### ஞானக் கதிர்

கொண்டிருந்தார்கள்.

கிருபாசாரியாருடையமைத்துனர் துரோணாசாரியர்; இவர் கானகத்தில் தவத்தை மேற்கொண்டு வாழ்ந்தார். துரோணருடைய தவத்தினால் அவருடைய மனைவி கிருபியிடம் அஸ்வத்தாமா பிறந்தார். அக்குழந்தை பாலின்றி வருந்தி அழுதது. குழந்தையின் நலங்கருதி, துரோணர் தமது பள்ளித்தோழன் துருபதனிடம் சென்றார். நட்பருமை யறியாத கயவனாகிய துருபதன் துரோணரை அவமதித்தான். அதனால் மனம் புண்பட்ட அவர் அத்தினபுரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். நகருக்கு அருகில் மாணவர் விளையாடும் இடம்.

பாண்டவர்களும் துரியோதனாதியரும் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். பந்து படித்துறை இல்லாத ஒரு கிணற்றில் விழுந்துவிட்டது. அதனை எடுக்கும் வழியறியாது இருதிறத்துப் பிள்ளைகளும் கிணற்றைச் சுற்றி நின்று திகைப்புற்றிருந்தார்கள்.

மனைவியுடனும் மகனுடனும் அழுக்குத் துணியுடுத்து, தாடியும் மீசையுமாக வருகிறார் துரோணர். நகரவாசிகளும் அரசகுமாரர்களுமாகிய இவர்கள் அவரை எப்படி மதிக்கக் கூடும்.

துரோணர், ''குழந்தைகளே! படிக்கிற நீங்கள் இப்போது இக் கிணற்றைச் சுற்றி நிற்கிற காரணம் யாது?' என்று வினவினார்.

அவருடையதோற்றம் அப்பிள்ளைகளுக்கு அவரிடம் மதிப்பை உண்டாக்கவில்லை. ''நாங்கள் எதற்காக நின்றால் உனக்கென்ன? உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ'' என்று அலட்சியமாகக் கூறினான் துரியோதனன். மற்றப் பிள்ளைகளும் துரோணரைப் பரிகசித்தார்கள்.

நட்சத்திரக் குழுவின் இடையில் இளம் பிறை திகழ்வது போல் திகழ்ந்த அர்ச்சுனன் மட்டும் துரோணரைத் தொழுது, ''சுவாமி! வணக்கம். நாங்கள் குருகுலத்து அரசகுமாரர்கள். பந்து கிணற்றில் விழுந்து விட்டது. அதனை எடுக்க வகையறியாது திகைக்கிறோம்'' என்றான்.

துரோணருக்கு, அர்ச்சுனனுடைய அடக்கமான குணம் பெருமகிழ்ச்சியைத் தந்தது. அர்ச்சுனனுடைய இனிய சொல் அவருடைய உடதளத்தை உருக்கியது. ''தம்பி நீங்கள் யாரிடம் படிக்கிறீர்கள்?''

''நாங்கள் கிருபாசாரியாரிடம் கல்வி பயில்கிறோம்.''

''நல்லது; இப்படி ஒரு பொருள் கிணற்றில் தவறி விழுந்தால் அதனை எளிதாக எடுக்கும் முறையை அவர் உங்களுக்குக் கற்பிக்கவில்லையா?'' ''இல்லை.''

நல்லது என்று கூறி, துரோணர் அங்கு நிரம்ப முளைத்திருந்த சிவிரங் குச்சிகளை எடுத்து அவைகளை ஒழுங்காகத் திருத்தினார். பிள்ளைகள் எல்லாம் அவர் என்ன செய்யப்போகிறார் என்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அர்ச்சுனன் காதில், அவர் ஒரு மந்திரத்தை உபதேசித்தார். அந்தச் சிவிரம் புல்லுகளை அவன் கையில் தந்து. ''அர்ச்சுனா! உனக்கு நான் உபதேசித்த மந்திரத்தை உச்சரித்து, ஒவ்வொரு குச்சியையும் கிணற்றில் எறி' என்றார்.

அர்ச்சுனன் அம் மந்திரத்தைக் கூறி, ஒரு குச்சியை எறிந்தான். அது ஆழத்தில் உள்ள பந்தில் நுழைந்தது. பின்னர் ஒவ்வொரு குச்சியையும் எறிந்தான் ஒரு குச்சி மறு குச்சியின் நுனியில் தைத்துக் கொண்டே வந்தது. மேலே வந்த குச்சியைப் பிடித்துத் தூக்கினான். பந்து வெளியே எடுக்கப்பட்டது.

இந்த அதிசயத்தை எல்லாப் பிள்ளைகளும் பார்த்தார்கள். ''அடே! இவர் ஒரு பெரிய மந்திர வித்தைக் காரர். மிகவும் சமர்த்தர். இவரை நாம் அலட்சியம் செய்தோமே?'' என்று கூறி. அவரைப் பணிந்து ''சுவாமி! தாங்கள் யார்? எங்குப் போகின்றீர்?'' என்று கேட்டார்கள்.

துரோணர், ''குழந்தைகளே! நான் துரோணர் என்கிற முனிவன். உங்கள் குருநாதருடைய இல்லத்திற்குச் செல்கிறேன்'' என்று கூறி விட்டுச் சென்றார்.

பிள்ளைகளின் வேண்டுகோளுக்கு இணங்கி, பீஷ்மாசாரியார் துரோணரையும் அந்தக் குருகுலத்தில் ஆசிரியராக அமர்த்தி, வில்வேதம் பயிற்றுவிக்குமாறு ஏற்பாடு செய்தார். இயல்பாகவே அடக்கமுடைய அர்ச்சுனன், துரோணரிடம் மேலும் அடக்கமாகப் பல பணிவிடைகள் புரிந்து, அவருடைய மனத்தை மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ வைத்தான். குருவுக்கு உகந்த சீடனாக விளங்கி, வில்வித்தையில் சமானமில்லாதவனாக ஆனான். அர்ச்சுனனுடைய முன்னேற்றத்துக்கு மூலகாரணமாக நின்று உதவியது அவனுடைய அடக்கமே.

அறிவு உயர உயர, அடக்கம் உயர வேண்டும். அடக்கம் அறிவின் மிகுதியைத் தெரிவிக்கிற ஓர் அடையாளம். சாரமும் ஈரமும் இல்லாத உலர்ந்த ஓலை சல சல என்று ஒலிக்கிறது.பச்சோலை ஒலிப்பதில்லை. அன்றியும் வெண்கல மணி அதிகமாக ஒலிக்கும்; தங்கமணி ஒலிப்பதில்லை அதனால் பச்சோலைக்கும் தங்கமணிக்கும் பெருமை தானே?

★

## திருமுருக கிருபானந்தவாரியார்

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையினால் நடத்தப்படும் சகல ஆரம்ப சுகாதார வைத்திய நிலைய சிகிச்சைகளும் 19-03-2001 ஆம் திகதி முதல் புதிய எம். பி. பி. எஸ். வைத்தியரினால் வழமையான இடங்களில் வழமையான நாள்களில் நடத்தப்படும். சுகாதார வைத்திய அதிகாரியான டாக்டர் இ. தெய்வேந்திரன் கட்டாய லீவில் அனுப்பப்பட்டும், குடும்பநல சேவையாளர்கள் பலர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டும் உள்ளமையினால் அவர்களுக்கும் இச்சேவைகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதைப் பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.

எனவே சிகிச்சை பெறுவோர் தயவுசெய்து வழமையான சிகிச்சை நிலையங்களுக்கு சமுகமளித்து சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இராசா தணிகாசலம்,
மாநகர ஆணையாளர்.

யாழ்ப்பாணம்.

[சி/15819]

## கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் உதவிப் பணிப்பாளர் (வடக்கு) பணிமனை இயங்குவதற்கான வாடகைக் கட்டடம் பெற்றுக்கொள்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரல்

மேற்படி அலுவலகம் இயங்குவதற்கு உகந்த கட்டடம் ஒன்றை வாடகைக்கு வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. இக் கட்டடம் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையவிருத்தல் வேண்டும்.

அ) இப்பணிமனை இயங்குவதற்கு குறைந்தது 03 அறைகள் உட்பட தேவையான விசாலமான இடப்பரப்பைக் கொண்டிருக்கவேண்டும்.

ஆ) அடிப்படை வசதிகளான நீர், மின்சாரம் வசதிகளை கொண்டிருக்க வேண்டும்.

இ) இக்கட்டடம் யாழ். நகரிலிருந்து 500 மீற்றர் தூரத்தினுள் மானிப்பாய் வீதி, காங்கேசன்துறை வீதி, நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி அல்லது இவ்வீதிகளுக்கு இடையில் அமைந்த குறுக்கு வீதிகளில் அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் சட்ட உரிமையாளர்களிடம் இருந்து 31 - 03 - 2001 இற்கு முன்னராக உதவிப் பணிப்பாளர் (வடக்கு) அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், இல. 180, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும். எதிர்பார்க்கும் வாடகை, ஒப்பந்த காலம் மற்றும் ஏனைய நிபந்தனைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்பவும்.

உதவிப் பணிப்பாளர் (வடக்கு)
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(85738)

## மரண அறிவித்தல்

### வெற்றிவேலு சிவப்பிரகாசம்

அராலி செட்டியாமடத்தைப் பிறப்பிடமாகவும் சரசாலை மத்தியை வதிவிடமாகவும் கொண்ட வெற்றிவேலு சிவப்பிரகாசம் அவர்கள் நேற்று முன்தினம் (21 - 03 - 2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதிகளான சிவானந்தசோதி, யோகாம்பிகை, கலாநிதி, கங்காதேவி (வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் — சாவகச்சேரி), பிறேமாவதி, சரஸ்வதி, மகேஸ்வரன் (மகேசன் ஸ்ரோர்ஸ் — மட்டுவில்), குகன் (பல நோ. கூ. சங்க முகாமையாளர் — சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற சிவானந்தன், திரவிய செல்வம், பாலசுப்பிரமணியம், சிவநாதன், சிறிகரன் (கொழும்பு), இராஜேஸ்வரி, குமுதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22 — 03 — 2001) வியாழக்கிழமை ஆவரங்கால் ''அமிர்தகௌரி வாசாவில்'' பி. ப. 2 மணியளவில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
மகேஸ்வரன், குகன்,
திருமதி க. பாலசுப்பிரமணியம்
(பிள்ளைகள்)

தற்காலிக முகவரி:
''அமிர்த கௌரி வாசா''
ஆவரங்கால்,
புத்தூர்.

(சி/15844)

# 6 ஆயிரம் பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 23

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் வதிவிட வேளாண்மை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் 6 ஆயிரம் விவசாயப் பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள எட்டு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள விவசாயிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடையவுள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் வலிகாமம் பகுதியில் கடந்த இரண்டு வாரங்களாக விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும்—

நேற்று வரை ஆயிரத்து 200 விவசாயிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன என்றும்—

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

ஏப்ரல் இறுதிப் பகுதிக்குள் 6 ஆயிரம் பேருக்கும் இந்த உபகரணங்கள் முற்றாக வழங்கப்பட்டுவிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மண்வெட்டி, வாளி, கத்தி மற்றும் மரக்கறி விதைகளும் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஐ—5)

## கூட்டுறவு மாதாந்த மாநாடு

அரியாலை, மார்ச் 23

யாழ். குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான மாதாந்த மாநாடு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதன் தலைமையில் இந்த மாதாந்த மாநாடு இடம்பெறும். (ஐ-17)

## உணவு விநியோகம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

உணவுவிநியோகம் தொடர்பானகலந்துரையாடல் இன்று முற்பகல் 11-30 மணிக்கு யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள், ப. நோ. கூ. ச. தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கூட்டுறவு உதவி ஆணையாளர், உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர்கள் மற்றும் பாவனையாளர் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-5-ரி)

## விளையாட்டு நிகழ்வு

தென்மராட்சி, மார்ச் 22

பளைப் பிரதேச செயலர் பிரிவில், பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

(க - 117)

## டிறிபேர்க் கல்லூரி மாணவருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 23

டிறிபேர்க் கல்லூரியில் இருந்து இந்த ஆண்டு முதல் தடவையாக ஜி. சி. ஈ. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுள், வடமராட்சியில் கல்வி கற்பவர்கள் தமது ஒப்படைகள், கணிப்பீடுகள் என்பவற்றின் புள்ளிகளையும் செயற்றிட்ட அறிக்கையையும் ஆசிரியை திருமதி ப. ஜெயராசாவிடம் ஒப்படைக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

ஏனைய பகுதிகளில் கல்வி கற்கும் மாணவர்கள் கோண்டாவில் திரு கல்வி நிலையத்தில் இயங்கும் கல்லூரியில் மேற்படி விவரங்களை எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாகச் சமர்ப்பித்து உறுதிப்படுத்துமாறு கல்லூரி அதிபர் மு. நாகேந்திரராஜா கேட்டுள்ளார்.

(ம)

## சங்கீத சபையின் ஆசிரிய தர பரீட்சையில் 40 பேர் சித்தி

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடஇலங்கை சங்கீத சபையினரால் நடத்தப்படும் ஆசிரியர் தரப் பரீட்சைக்கு கடந்த வருடம் தோற்றியவர்களில் 40 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இராமநாதன் கல்லூரியில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் வடஇலங்கை சங்கீத சபையின் தலைவருமான திருமதி செ மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் வழங்கப்படவுள்ளன.

கர்நாடக சங்கீதம், நடனம் உட்பட இசைத்துறையுடன் தொடர்புடைய பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்களிலேயே 40 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை—

வடஇலங்கைச் சங்கீத சபையினரின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4. 00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் வதிவிடக் கருத்தரங்கும் செயலமர்வும் நடைபெற உள்ளன.

இந்தக் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிறு நண்பகல் 12 00 மணிக்கு முடிவுறும். அதனைத் தொடர்ந்து சங்கீத சபையினரின் ஆசிரியர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெறும். (ம-6-9)

## போக்குவரத்து அமைச்சுக்கு புதிய இணையத் தளம்

கொழும்பு, மார்ச் 23

போக்குவரத்து அமைச்சின் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு போக்குவரத்து அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

போக்குவரத்து அமைச்சின் சேவைகள் தொடர்பாகவும் கட்டணம் மற்றும் நேர அட்டவணை விவரங்களையும் இணையத் தளத்தின் ஊடாக அறிந்துகொள்ள முடியும் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது

[ம-6]

## காசநோயாளர் தினம்

கோப்பாய், மார்ச் 23

உலக காசநோயாளர் தினம் கோப்பாய் மருத்துவமனையில் இயங்கும் மயிலிட்டி மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் நாளை சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட உள்ளது.

கோப்பாய் சுற்றயல் கூறு மருத்துவமனைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-73)

## வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, மார்ச் 23

சிலாபம் — உடப்பு கரையோரப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடிபொருள்களையும் வெடிக்க வைக்கும் கருவிகளையும் சிலாபம் பொலிஸார் கைப்பற்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-6)

## மீனவருக்கு கடற்றொழில் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடமராட்சி கிழக்கு, வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 5 உறுப்பினர்களுக்கு 'கெயர்' நிறுவனத்தினால் சுழற்சி முறைக்கடன் அடிப்படையில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

(ம-10)

## அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைப்பு

தென்மராட்சி, மார்ச் 23

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவை புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இடைக்குறிச்சி, கைதடி மேற்கு ஆகிய மாதர்கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும், கரம்பைக் குறிச்சி கிழக்கு மாசேரி, வரணி வடக்கு, கைதடி மேற்கு ஆகிய கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டுபுதியசெயற்குழுவினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை புனரமைப்புச் செய்யப்படாத சங்கங்கள் உடனடியாக இணுவிலில் இயங்கும் தென்மராட்சி பிரதேச செயலகத்திலும், நெல்லியடியில் இயங்கும் உப அலுவலகத்திலும் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ. பரராஜசேகரம் அறிவித்துள்ளார்.

(ம-117)

## பதில் பிரதேச செயலர் கடமை ஏற்பு

வலிகாமம் தெற்கு, மார்ச் 23


உடுவில் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலராக கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இம் மாதம் 17 ஆம் திகதி முதல் அவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வியாழன் ஆகிய இரு நாள்களிலும் அவர் இங்கு வந்து கடமையாற்றுவார்.

உடுவில் பிரதேச செயலராக கடமையாற்றிய ஆ. மகாலிங்கம் காலமானதை அடுத்து கே. கேதீஸ்வரன் பதில் பிரதேச செயலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ம-152)

# வடக்கின் மாபெரும் மோதல் இன்று யாழ்.நகரில் ஆரம்பம்

வடக்கின் மாபெரும் மோதல் **(Battle of the North)** என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென்ட்ரல், சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக் கிடையேயான கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகி நாளை முடிவடைகிறது. யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இப் போட்டி இந்தத் தொடரின் 95 ஆவது போட்டியாகும்.



**சென்ட்ரல் அணியினர்**

**இருப்பவர் (இ-வ):- வி.எஸ்.மகேந்திரன் (விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர்), பி.கஜிதரன், கே.பிரகாஷ் (அணித்தலைவர்), க.இராசதுரை (அதிபர்), எஸ்.பிருந்தாவன் (அணி உப தலைவர்), எஸ்.தனேஸ்காந்தன் (பயிற்றுனர்), இ.எவ்.ஆர்.ஜெயக்குமார் (பொறுப்பாசிரியர்).**

**நிற்பவர் மத்தியவரிசை (இ-வ):- எஸ்.கார்த்திபன், கே.கார்த்திக், வி.இரஜீவ்குமார், எஸ்.பிரசன்னா, ஏ.இளமாறன், பி.சார்ள்ஸ் பிறோணிசன், எஸ்.நவநிதன், எஸ்.துசாந்தன், ஆர்.சேயோன்.**

**நிற்பவர் பின்வரிசை (இ-வ):- ஏ.டியுரன், ஆர்.மதூசன், எஸ்.துசாந்தன், கே.றோகான், ஜெ.பிரகாஷ்.**

இன்று ஆரம்பமாகி நாளை முடிவடையும் இந்த மாபெரும் போட்டியின் முடிவில் ஒவ்வொரு துறைகளிலும் சிறந்து விளங்கும் வீரர்களுக்கும், ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்படுபவருக்கும் வெற்றிக்கிண்ணங்களும் பரிசுகளும் வழங்கப்பட உள்ளன.

மத்திய கல்லூரி அதிபர் கே.இராசதுரை, சென்.ஜோன்ஸ் அதிபர் எஸ்.தனபாலன் ஆகியோரின் தலைமையிலான குழுக்கள் இப்போட்டியின் ஏற்பாடுகளை செய்துள்ளன.



**சென். ஜோன்ஸ் அணியினர்**

**இருப்பவர் (இ-வ):- க.செ.முகுந்தன் (பயிற்றுநர்) வா.விஷ்ணுவர்த்தன், பா.பிரதீபன் (அணித்தலைவர்), எஸ்.தனபாலன் (அதிபர்), தி.இராகுலன் (அணி உப தல்லவர்), ப.இலவேந்திரா, வே.சி.பெ.துசிதரன் (விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர்)**

**நிற்பவர் மத்திய வரிசை (இ-வ):- அ.தனஞ்செயன், தோ.கி.அன்ட்ரு, ச.அகிலன், பா.பிரியந்தா, இ.ச.வில்சன், வி.குமணன்**

**நிற்பவர் பின் வரிசை (இ-வ):- இரா.சஞ்சித், அ.ஜீவதர்சன், ஸ்ரீ.கிருஷ்ணகுமார், ச.இராஜாராம்.**

நடந்து முடிந்த 94 போட்டிகளிலும் சென்.ஜோன்ஸ் கல்லூரி 32 போட்டிகளிலும் சென்ட்ரல் 21 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 33 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. எட்டு போட்டிகளுக்கான முடிவுகள் பற்றிய பதிவுகள் தெரியவரவில்லை.

யாழ்.மத்திய கல்லூரி இவ்வாண்டில் யாழ். மாவட்டத்திலுள்ள 9 பாடசாலைகளுடன் விளையாடி 5 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. 4 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. சென்.ஜோன்ஸ் 7 போட்டிகளில் விளையாடி 4 இல் வெற்றி பெற்றுள்ளது. 3 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. இந்த பெறுபேறுகளை பார்க்குமிடத்து இரு கல்லூரி அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பது தெரிகிறது. ஆகவே யாழ்.கிரிக்கெட் ரசிகர்கள் மிகவும் விறுவிறுப்பான போட்டி ஒன்றினை எதிர்பார்க்கலாம்.

இன்றும் நாளையும் ஆட்டம் நடைபெறும் நேரங்கள்:-

- காலை 9.30 முதல் நண்பகல் 12.00 வரை.
- பிற்பகல் 12.40 முதல் பிற்பகல் 3.10 வரை.
- பிற்பகல் 3.30 முதல் மாலை 5.40 வரை.


சென்ட்ரல் - சென். ஜோன்ஸ் போட்டிக்கு ஆட்ட நேரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதும், தினமும் குறைந்தது 105 ஓவர்கள் விளையாடப்பட வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதால் குறிக்கப்பட்ட நேரத்துக்குள் 105 ஓவர்கள் விளையாடப்படாத பட்சத்தில் மாலை 5.40 மணிக்குப் பின்னரும் ஆட்டம் தொடரும்.

வழமைபோல் யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் இப்போட்டிக்கான மத்தியஸ்தர்களை வழங்குகிறது.

# பொன் அணிகள் போரும் இன்று தொடங்குகிறது

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 'பொன் அணிகள் போர்' **(Battle of the gold)** எனப் புகழப்படும் வருடாந்த கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் யாழ்ப்பாணக் கல்லூரி "பிக்னல்" மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்த ஆட்டங்களுக்கான மத்தியஸ்தர்களையும் யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கமே வழங்கவுள்ளது. இதுவரை இரு கல்லூரிகளுக்கும் இடையேயான 84 கிரிக்கெட் ஆட்டங்களில் 24 ஆட்டங்களில் சென். பற்றிக்ஸ"ம், 15 ஆட்டங்களில் யாழ்ப்பாணக் கல்லூரியும் வென்றுள்ளன. 25 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. 19 ஆட்டங்களின் முடிவுகள் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை.



**சென். பற்றிக்ஸ் அணியினர்**

**இருப்பவர் (இ-வ):- எஸ்.சகாயறாஜா (விளையாட்டு பொறுப்பாசிரியரும், பயிற்றுநரும்), ஏ.ஹரிகஜன், எம்.பிரசாந்தா யோசப் (தலைவர்), வண.பிதா ஏ.ஐ. பேனாட் (அதிபர்), ரீ.யூட் அன்ரனனஸ் (உபதலைவர்), பா.நிரஞ்சன், .பி. ஜெயகுமார் (கிரிக்கெட் பொறுப்பாசிரியர்)**

**நிற்பவர் 1 ஆம் வரிசை (இ-வ:- எஸ்.அருண்தநாத், பி.பிரதீபன், ஜீ.எஸ்.லொயிட், எஸ்.டினேஸ், ஏ.ஆர்.சேர்ச்சில், யோ.சகாயராஜ், யே.பி.அர்ச்சுதன்,**

**நிற்பவர் 2 ஆம் வரிசை (இ-வ):- சி.நிஷாந்தன், ரீ.றொசான் டெமி, டி.ஏ.யோசப், ஏ.ரீ.எட்மன், சி.ஆர்.என்.கிருசாந்தன், ஆர்.நிஷாந்தன்.**

இந்தத் தொடரின் 84 ஆவது வருடாந்த ஆட்டம் இதுவாகும்.

சென். பற்றிக்ஸ் அதிபர் வண.பிதா ஏ.ஐ. பேனாட், யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் வண பிதா ஏ.ஏ.போல் ஆகியோர் இந்த ஆட்டத்துக்கான ஏற்பாடுகளைக் கண்காணித்து வருகின்றனர்.

இன்றும் நாளையும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை ஆட்டங்கள் நடைபெறும்.

இந்த ஆட்டத்தின் முடிவிலும் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த பந்துத் தடுப்பாளர், பல்துறை வீரர், சிறந்த இணைப்பாட்ட வீரர்கள், ஆட்டநாயகன் ஆகியோருக்கும் வெற்றியீட்டும் அணிக்கும் வெற்றிக் கிண்ணங்கள் பரிசாக வழங்கப்படவுள்ளன.



**யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர்**

**இருப்பவர் (இ-வ):- பி.எல்.மோகனகுமார் (பயிற்றுநர்), ஜீ.லக்ஸ்மன், ஜீ.பிரகாஷ் (தலைவர்), வண.பிதா ஏ.ஏ.போல் (அதிபர்), ஆர்.மனேஸ்குமார் (உப தலைவர்), என்.தற்பரானந்தன் (விளையாட்டுப் பணிப்பாளர்)**

**நிற்பவர் (இ-வ) 1 ஆம் வரிசை:- ஏ.யொகான், எஸ்.பிரதீபன், கே.சுகேஸ், ஜீ.கௌதமன், என்.எஸ். செந்தூரன், பி.சிவரூபன், எஸ்.நிம்பிறோ, யூ.உகந்த ஜெகன்**

**நிற்பவர் (இ-வ) 2 ஆம் வரிசை:- ஜீ.பிரஜீவ், ரீ.அகிலசன், ஏ.திலீபன், ஜீ.கோகுலறயணன். எஸ்.நிறோயன்.**

# தொழில் உத்தியோகத்தர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ்ப்பாணம் தொழில் திணைககளத்தில் நீண்ட காலமாக தொழில் உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுவதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இப்பதவிக்கான வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் உள்ளதாகவும் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தொழில் திணைக்கள உத்தியோகத்தர் பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து எவரும் தோற்றாததால் மேலும் நீண்ட காலப்பகுதிக்கு இப் பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயே இருக்கும் என அஞ்சப்படுவதாகவும் தொழில் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. சில வருடங்களுக்கு முன்பு 10 அதிகாரிகள் கடமையாற்றி வந்த தொழில் திணைக்களத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் தற்போது இரண்டு அதிகாரிகள் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க தொழிற் சட்டங்கள் , தொழில் விதிகள் மற்றும் தொழிலாளர் நலன்கள் என்பவற்றை பேணுவதற்கு தொழில் திணைகளம் தன்னாலான சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது என்றும் அந்தத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (க-ரி)

# கற்பித்தல் உபகரணக் கண்காட்சி இன்று ஸ்ரான்லிக் கல்லூரியில்

யாழ்ப்பாணம்,மார்ச்23

வரலாறும் சமூகக்கல்வியும் பாடததுக்கான கற்பித்தல் உபகரண யாழ்.கல்வி வலய மட்டப் போட்டியும் கணகாட்சியும் இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரான்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.வரதராசா கலந்துகொள்வார்.

காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியை மாணவர்களும் ஆசிரியர்களும் பார்வையிடலாம் என்று உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் தெரிவித்துள்ளார். (க-10)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. சு.நடராசலிங்கம்** அவர்கள்
**(S.L.P.S - 2-1)**

யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய முன்னாள் அதிபரும், தற்போது யா/ கோண்டாவில் இந்துமகா வித்தியாலய உப அதிபரும், எமது சனசமூக நிலைய முன்னாள் காப்பாளருமான

**திரு. சு. நடராசலிங்கம் அவர்கள்**

இலங்கை அதிபர் சேவையில் தரம் 2-1 க்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பதவியுயர்வுகள் பெற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

**நிர்வாக உறுப்பினர்கள்,**
**நெடுந்தீவு மேற்கு சனசமூக நிலையம்.**

(85716)

## விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகிகளுக்கு!

வலி.மேற்கு பிரதேச விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள் அல்லது செயலாளர்களை இன்று பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரத்திலுள்ள வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு பிரதேச சபைத்தலைவர் என்.திரிலோகநாதன் கேட்டுள்ளார். கழகத்துக்கான 'றப்பர் முத்திரை' மற்றும் கடிதத் தலைப்புகளை எடுத்து வரும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஓ)

## ஆலயத்துக்குச் செல்ல அனுமதி மறுப்பு

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்துக்காகக் கடந்த திங்களன்று மண்டுவில் கண்ணகை அம்பாள் ஆலயத்துக்குச் செல்வதற்காகச் சென்ற ஆலய பிரதமகுருவும் பொதுமக்கள் சிலரும் சோடிகாமத்துக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படாததால் ஏமாற்றத்துடன் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தை நடத்துவதற்காக ஆலய சுற்றாடல் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டது. ஆனால் கடந்த திங்கள் சென்றவர்கள் ஆலயப்பகுதிக்குச் செல்ல விடாமல் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 12 ஆம் நாள் (25-03-2001) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.20 நிமிடம் முதல் 3.20 நிமிடம் வரையுள்ள கர்க்கடக லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சகாதேவன்**
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சுசிலா**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில்
திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து
மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை நாடும்:

**திருமதி பேரின்பநாயகம் செல்வரத்தினம்**
குடும்பத்தினர்
*தற்காலிக முகவரி:*
இராமகிருஷ்ணா வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
*நிரந்தர முகவரி:*
மடத்தடி, மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

**திரு.திருமதி சுப்பிரமணியம்** (இந்திரன்)
குடும்பத்தினர்
*தற்காலிக முகவரி:*
மூளாய் வீதி, வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டை.
(லீலா ஸ்ரோர் அருகில்)
*நிரந்தர முகவரி:* நாவற்குழி கிழக்கு, கைதடி.

**(இரு வீட்டார் அழைப்பு)** (85718)





இலகுவானது, பாதுகாப்பானது, பயனுள்ளது, பேன்களுக்கெதிரான நிவாரணி.
*வாரம் ஒரு தடவை* தொடர்ந்து பாவித்துவரின் உங்களினதும் பிள்ளைகளினதும் கேசத்தில் *பேன்களையும் ஈருகளையும்* முற்றாக இல்லாதொழிக்கும்.
தற்போது 10ml, 50ml அளவுகளில் எங்கும் கிடைக்கும்.

**Hemas Marketing (pvt) Ltd.** ஊடாக விநியோகிப்பவர்கள்:

*றாபா சண்முக வர்த்தகம்*
104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி15511)


# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

**23.03.2001**

HAPPY



BIRTHDAY

## செல்வி
# ரம்மியா கோபாலசிவம்

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
**திரு.திருமதி கோபாலசிவம் - யசோதினி தம்பதிகளின்**
**செல்வப் புதல்வி**

※ **ரம்மியா** ※

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (23.03.2001) வெள்ளிக்கிழமை நயினாதீவில் உள்ள தனது இல்லத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடுகின்றாள். ரம்மியாவை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், அயலவர், நண்பர்கள், நண்பிகள் அனைவரும் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

கா.கோபாலசிவம்
*(உரிமையாளர்:-* **விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்.)**
**5ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.** (85633)

# நெஞ்சம் மறவா நினைவலைகள்

**எம் குடும்பத் தேரின் அச்சாணி!**



திருமதி
# கனகம்மா துரைராசா
(கரவெட்டி)

மலர்வு 16-05-1936
உதிர்வு 03-04-2000

**திதி- 23.03.2001**

ஆண்டுகள் ஒன்றல்ல; அம்மா!
ஆருயிர் உள்ள வரை
மண்ணில் மகிழ்வுடன் நேசித்த தாயே!
மரணத்திலும் உமை மறவோம்.

"கனகம்மா இல்லம்"
*கணேஸ் அறிவாலய ஒழுங்கை,*
*கரவெட்டி.*
- குடும்பத்தினர்

*தகவல்:* **து.அருந்தவசீலன்** (மகன்) (85713)

# கைதான சட்டத்தரணி, வர்த்தகர் மீதான விசாரணையைத் துரிதப்படுத்த ரத்வத்தை பணிப்பு

கொழும்பு,மார்ச்23

பொலீஸாரால் கைது செய்யப பட்டு தடுபோது தெஹிவளை பொலீஸ நிலையத்தில் தடுத்து வைக்கப்பட் டுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த மனித உரிமைகள் சட்டததரணி கனக நமநாதன் வர்த்தகரான பிரான்ஸிஸ் சில்வெஸ்ரா இராசபுத்திரன் ஆகிய இருவர் மீதான விசாரணை களைத் துரிதப்படுத்தி- அவர்கள் தொடர் பான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப் படாவிட்டால் உடனடியாக விடு விக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதிப் பாதுகாப்பு அமைசசர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த பொலீஸ்மா அதி பர் லக்கி கொடித்துவக்குக்கு பணிப் புரை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற் றுப் புதன்கிழமை நடைபெற்ற பாது காப்பு அமைச்சருக்கான ஆலோச னைக் குழுக் கூட்டத்தில் இவ்விரு வரின் கைது குறித்து மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து அமைசசர் இவ் வாறு உத்தர விட்டார்.

இந்தச் சட்டத்தரணி பொலீஸா ரால் கைது செய்யப்பட்டு விடுவிக் கப்பட்ட இளைஞன் ஒருவருக்கு சான்றிதழ் வழங்கியிருந்தார் என்றும் அண்மையில் தெஹிவளை வைத் தியா வீதியில் கைதான இளைஞர் ஒருவரைக் கொழும்புக்குக் கூட்டி வந்தார் என்றும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது என்று பொலீஸ் மா அதிபர் இக்கூட்டத்தில தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி என்ற முறையில ஓர் இளைஞனைக் கொழும்புக்குக் கூட்டி வருவது தவறல்ல என்றும அந்த இளைஞன் புலி உறுப்பினர் என்று எப்படி அவருக்குத் தெரியும் என்றும் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கூறினார்.

அத்துடன் அந்தச் சட்டத்தரணி மனித உரிமைகள் தொடர்பான விசாரணைகளுக்காக உதவுபவர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை அடுத்து இப்பிரச்சினை குறித்து துரிதமாக விசாரணைகள் மேற்கொண்டு அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பொலீஸ் மா அதிபரிடம் தெரிவித் தார்.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரா னந்தா டி சில்வா, பொலீஸ்மா அதி பர், இராணுவ, கடற்படை, விமானப் படைத் தளபதிகள் மற்றும் படை உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (க)

## பஸ் தரிப்பு நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்23

உரும்பிராய் ஒஸ்கா லேன்- பலாலி வீதிச் சந்தியில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இப்பகுதியைச் சேர்ந்த காலஞ் சென்ற எஸ்.சுப்பிரமணியத்தின் ஞாப கார்த்தமாக அவரது குடும்பத்தவ ரால் அமைக்கப்பட்ட இந்த பஸ் தரிப்பு நிலையத்தை யாழ்ப்பாணத் துக்கு விஜயம் செய்த சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் ரோகித உடவத்த சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வட பிராந்திய போக் குவரத்துச் சபை பொதுமுகாமையா ளர் எம்.எஸ்.சொக்கலிங்கம், லயன், பேராசிரியர் ஆறுமுகம் மற்றும் லயன் பிரமுகர்களும் பங்குபற்றினர். (ஐ-9)

## தவறணையை இடம்மாற்ற ஆலோசனை

நவாலி,மார்ச்23

ஆனைக்கோட்டை 3ஆம் கட்டை யில் இயங்கும் கள்ளுத் தவறணையை காக்கைதீவுக் கடற் கரைக்குச் செல் லும் பாதையில் அமைக்குமாறு சிபார்சு செய்து சண்டிலிப்பாய் பிர தேச செயலர் நா.வேதநாயகன் மானிப் பாய் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள் ளார்.

இந்தத் தவறணையை இடமாற் றம் செய்யுமாறு கோரி ஆனைக் கோட்டை மக்கள் சண்டிலிப்பாய் பிர தேச செயலருக்கும் மற்றும் சம்பந் தப்பட்டோருக்கும் அண்மையில் மகஜர்களை அனுப்பி வைத்திருந்த தும் குறிப்பிடத்தக்கது. (ம-100)

## எழுத்தாளர் டானியல் நினைவுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்23

பிரபல எழுத்தாளர் அமரர் கே.டானியலின் நினைவு நாள் இன்றாகும்.

இதனையொட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்.பல்கலைக் கழ கத்தின் தமிழ் மன்றத்தினால் கருத் தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங் கில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா கேட்டுள்ளார். (க-10)

## எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் இளம் பெண் அனுமதி

தென்மராட்சி,மார்ச்23

மனநோயாளி எனக் கருதப்படும் இளம் பெண் உடம்பில் மண்ணெண் ணெய் ஊற்றித் தீ மூட்டிக் கொண்ட தாகக் கூறப்பட்டு எரிகாயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் உடுப் பிட்டி இமையாணனைச் சேர்ந்த எஸ். ஸ்ரீஜெயதேவி(வயது31) என்பவரே எரிகாயங்களுக்கு இலக்கானவராவார்.

இதேவேளை டிராக்டர்- சைக்கிள விபத்தில் காயமடைந்த யுவதியொ ருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

அல்வாய்ப்பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் இடம்பெயர்ந்து துன் னாலை மேற்கில் தங்கியுள்ள சுந் தரம் உதயகுமாரி (வயது32) என்ப வரே காயமடைந்தவராவார். சைக் கிள் பலத்த சேதமடைந்தது. (க-117)


## பொதுக்கூட்டம்

2 ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று மாலை 4.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். அனைவரும் தவறாது கலந்துகொள்ளவும்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(85742)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அருமைத்துரை பரமுருகானந்தன்

என் இதயக்கோயிலின் தீபம் அணைந்து
மாதம் ஒன்று ஆனதுவோ!
நேற்றுப்போல் இருக்குது மகனே
உன் திருமுகம் பார்த்து
இன்னும் பல காலம் எம்முடன் சேர்ந்திருப்பீர்கள்
என்று எண்ணியிருந்தோம் அண்ணா!
படைத்தவனுக்கோ பொறுக்கவில்லை!
பறித்து விட்டான் உங்களை எம்மிடம் இருந்து.

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

21.02.2001 இல் சிவபதமடைந்த எமது அன்பு மகன் அ.பரமுருகானந்தன் அவர்களின் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, சாமாராதனை ஆகியன இன்று 23.03.2001 எமது இல்லத்தில் நடைபெறும். அதன் பின் நடைபெறவுள்ள மதிய போசன விருந்தில் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:
*உடுவில் தெற்கு,*
*பாலாவோடை,*
*மானிப்பாய்.*

*உமது பிரிவால் வாடும்*
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனி.

(85752)




யாழ்ப்பாணக் கல்லூரி கிரிக்கெற் அணியை வாழ்த்துகிறோம்

பிரகாஷ்

தலைமையில் இன்று
பிக்னல் சதுக்கத்தில்
பொன் அணிகள் போரில்
குதிக்கவிருக்கும் அணியை வாழ்த்துகின்றோம்.

கல்லூரி வீதி
நண்பர்கள்.

(85751)


## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

### ஆதனவரி அறிவித்தல் - 2001

2001ஆம் ஆண்டு முதலாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 02.04.2001 திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இந்த அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ் விவரப்படி வெலியாற்றுப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறி யத்தருகின்றேன்.

| | |
|---|---|
| *வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக்காணிகள்* | 15% |
| *ஏனைய காணிகள்* | 20% |

காசோலையாகச் செலுத்துவோர், மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
15.03.2001

இராசா. தணிகாசலம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/15851)

## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஆசிரியர்
திருமதி ஜெயக்குமாரி செந்தில்வேல்
அவர்களின் அருமைச் சகோதரன்

### செல்வன் முத்துக்குமாரு சுந்தர்ராஜ்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் அளிக்க இறைவனை வேண்டி நிற்கும்.

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்,
பருத்தித்துறை.

(C/15855)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரிமளகாந்தி நாகரட்ணம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பரி மளகாந்தி நாகரட்ணம் கடந்த (20.03.2001) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் தர்மதேவி, குமாரகுலசிங்கம்(முன்னாள் உத்தியோகத்தர் C.T.B.) ஆகியோரின் தாயாரும், திருமதி மகேஸ்வரி அம்பலவாணரின் சகோதரியும், திரவியம், காலஞ்சென்ற இராஜசுந்தரம் ஆகியோரின் மாமியாரும், சந்திரா, சகுந்தலா, வரதராஜா, ஜெயரட்ணம், கிருஷ் ணபாஸ்கரன், பாக்கியம், கணேசன் ஆகியோரின் பெரிய தாயாரும் தர்மசுந்தரி (லிகிதர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை) தாரணி (விஞ்ஞானபீடம், இறுதியாண்டு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் சங்கீதாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.03.2001 புதன்கிழமை கொத்துத்துறை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அற்கின்சன் வீதி,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
நா.குமாரகுலசிங்கம்.
*(மகன்)*

*(85760)*

### சிற்றம்பலம் தியாகராசா

சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட சிற்றம்பலம் தியாகராசா நேற்று (22.03.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் - ஆச்சித்தாய் தம்பதிகளின் புதல்வனும் சரஸ்வதியின் அன்புக்கணவரும், குகனேசன்(சுவிஸ்), ஜானகி(நோர்வே), கண்ணகி, காலஞ்சென்ற தவனேசன் மற்றும் மாலதி(பிரதேச செயலகம், வலி.மேற்கு) ஆகியோரின் அன்புத் தந்தை யும், கந்தசாமி இராசரத்தினம், வேலுப்பிள்ளை, துரைராஜா, காலஞ் சென்ற தனபாலு மற்றும் நித்தியானந்தன், ரகுநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பண்ணாகத்தைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் மயில்வாகனம், பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், பரிபூரணம், குலவீரசிங்கம், திரவியம், சற்குணசிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், குமரகுருமூர்த்தி, சிவகரன் ஆகியோரின் மாமனும், சகனா, சியானா (நோர்வே) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2001) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கியாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செல்லத்துரை வீதி,*
*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
- குடும்பத்தினர்.

(85761)


I.B.S சுண்டுக்குழி/ கோயில் வீதி.

தரம் 5 புலமைப்பரிசில் கூடிய புள்ளி பெற்றவர்கள்

| | |
|---|---|
| ✲ I. சஜிவரன் | - C.H.M.V |
| ✲ S. மோனோஜ் | - S.J.C |
| ✲ S. யசோதரா | |
| ✲ C. V. ஜோன் கலிஸ்ரஸ். | - S.P.C |
| ✲ D. சதீஸ் | - S.P.C |
| ✲ M. யூடிற்றா | - C.G.C |

அடுத்த பரீட்சை - 3
ஞாயிறு 1.00 p.m.

# போர் நிறுத்தத்தை புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு மேலும் காலஅவகாசம் வழங்கி, சமாதானத்திற்கான உகந்த புற நிலையை உருவாக்கும் நோக்குடனேயே விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் மேலும் ஒரு மாத காலத்திற்கு போர்நிறுத்தத்தை நீடிப்பதற்கு முடிவு செய்திருக்கிறது. சமாதானம் பிறந்து, இயல்புநிலை தோன்றி, சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் பேச்சுக்கள் நிகழ வேண்டும் என்ற எமது மக்களின் ஏகோபித்த அபிலாஷையை கருத்தில் கொண்டே நாம் மேலும் போருக்கு ஓய்வு கொடுக்கத் தீர்மானித்தோம்.

### 133 போராளிகள் வீரமரணம்

எமது சமாதான முன்னெடுப்புக்குச் சந்திரிகாவின் அரசாங்கம் இதுவரையும் சாதகமான முறையில் பதிலளிக்காது தட்டிக்கழிப்பதுடன் எமது 'இராணுவ பலவீனத்தை' மூடி மறைப்பதற்கு நாம் மேற்கொள்ளும் அரசியல் தந்திரம் என எமது முயற்சியை வர்ணிப்பது எமக்குக் கவலையைத் தருகிறது. எமது ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தையும், தற்காப்புப் போர் உத்திகளையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, சிங்கள ஆயுதப் படைகள் எமது போராளிகள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருகின்றன. வலிந்து தாக்குதல்கள், ஒழிந்திருந்து தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுக்கள், ஏவுகணைத் தாக்குதல்கள், சினைப்பர் தாக்குதல்கள், கடற்படைத் தாக்குதல்கள் இப்படியாகக் கடந்த கிறிஸ்மஸ் பண்டிகையில் இருந்து இன்றுவரை எமது போர் நிறுத்த காலகட்டத்தில் நிகழ்த்தப்பட்ட பல்வேறு வகையான தாக்குதல்களில் 133 போராளிகள் வீரமரணம் அடைந்திருக்கிறார்கள். இப்படியான ஆத்திரமூட்டும் போர் நடவடிக்கைகளின் போது நாம் தற்காப்பு நிலைப்பாட்டையே தழுவி நின்றோம். இந்தப் போர்நிறுத்த காலகட்டத்தின் போது வடக்குக் கிழக்குப் போர் முனைகளிலோ அன்றி கொழும்பிலும் தென்மாகாணங்களிலுமோ எந்த விதமான போர் நடவடிக்கையிலும் வன்முறைத் தாக்குதல்களிலும் நாம் ஈடுபடவில்லை என்பதனை ஸ்ரீலங்கா அரசாங்கம் நன்கறியும். நாம் ஒழுங்காக - கட்டுப்பாடான முறையில்- போர் நிறுத்தத்தைப் பேணி வருவதன் காரணமாகவே தலை நகரிலும் தென்னிலங்கையிலும் அமைதியும் ஸ்திரநிலையும் நிலவுகிறது. ஆயினும் சந்திரிகாவின் அரசு எமது நல்லெண்ண முயற்சியை உதாசீனம் செய்து, அதனை ஓர் அபத்த நாடகமாகக் கேலி செய்து வருவது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கிறது.

### அரசிடம் ஆட்சேபம் தெரிவித்தோம்

சிறீலங்காவின் விமானப்படையினர் ரஷ்யாவிடமிருந்தும், இஸ்ரேலிடமிருந்தும் பெறப்பட்ட பெருந்தொகையான நவீனரக 'சுப்பர் சொனிக்' குண்டு வீச்சு விமானங்கள் மூலமாக முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் கரையோரக் கிராமங்கள் மீது இடைவிடாது தொடர்ச்சியாகக் கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால் அப்பாவித் தமிழ் மீனவர்கள் மத்தியில் பெருமளவிலான உயிர்ச்சேதம் ஏற்பட்டு வருவதுடன் அவர்களது குடியிருப்புகள், மீன்பிடி வள்ளங்கள், வலைகள் என்பன நாசமாக்கப்பட்டு வருகின்றன. நேற்றுக் கூட முல்லைத்தீவுக் கரையோரக் கிராமங்களாகிய சுண்டிக்குளத்திலும் மாத்தளனிலும் நிகழ்ந்த கொடூரமான விமானத் தாக்குதல்களில் நான்கு அப்பாவிப் பொது மக்கள் உடல் சிதறிப் பலியாகியதுடன் 11 பேர் வரை படுகாயமடைந்தனர். இப்படியாகத் தமிழ் மக்கள் வாழும் குடியிருப்புகள் மீது விமானப் படையினர் கண்மூடித்தனமாகத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வருவதைக் கடுமையாகக் கண்டித்து ஜனாதிபதி குமாரதுங்கவிற்கு நோர்வே சமாதானத் தூதுவர் மூலம் நாம் எமது ஆட்சேபனையைத் தெரிவித்தோம். திரு.எரிக் சொல்ஹெய்ம் சிறீலங்கா ஜனாதிபதியை நேற்று முன்தினம் பிரஸ்ஸ்ஸ் நகரில் சந்தித்தபோது எமது கடும் ஆட்சேபனையை அவரிடம் தெரிவித்தார். போர் நெருக்கடியைத் தணிக்க மறுத்து, இராணுவத் தாக்குதல்களையும் விமானக் குண்டு வீச்சுக்களையும் தீவிரப்படுத்தினால் நாம் எமது ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை ரத்துச் செய்ய நேரிடும் என சிறீலங்கா அரசாங்கத்திற்கு நாம் எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

### சர்வதேச நிலைப்பாட்டை சந்தேகிக்கின்றோம்.

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து, சர்வதேச சமூகம், குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள், இந்தியா போன்றன கடைப்பிடித்து வரும் வெளியுறவுக் கொள்கையில் எமக்கு ஆழமான ஐயப்பாடுகள் உள்ளன. ஒருபுறம் நிதியுதவியும், ஆயுத உதவியும் வழங்கி சிறீலங்கா அரசுக்கு ஆதரவு தெரிவித்தவாறு மறுபுறம் தமிழ் மக்களின் போராட்ட வடிவத்தை 'சர்வதேச பயங்கரவாதம்' எனக் கண்டித்து கொச்சைப்படுத்தி இவ்வுலக நாடுகள் கடைப்பிடித்துவரும் வெளியுறவுக் கொள்கையால் இலங்கைத் தீவில் அமைதியும் இன ஐக்கியமும் ஏற்படப்போவதில்லை. மாறாக, இம் முரண்பட்ட கொள்கையானது சிங்கள இனவாத அரசின் கடும் போக்கான இராணுவவாத அணுகு முறையையே ஊக்குவிப்பதாக அமைகிறது. இதனால், ஒடுக்கப்பட்டு நீதிகோரி நிற்கும் தமிழினமே வெகுவாகப் பாதிப்பிற்கு ஆளாகும். சர்வதேச பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவோம் என்ற கோஷத்தின் கீழ் உலகத்தில் மிகவும் பலம் வாய்ந்த நாடுகள், உலகத்தின் மிகப் பலவீனமான மானிட சமூகங்களுக்கு எதிராக அணி திரண்டு நிற்கின்றன. இந்தப் பலவீனமான, ஒடுக்கப்படும் மானிட வர்க்கங்கள் உலகத்தால் அந்நியப்படுத்தப்பட்டு ஏதிலிகளாக நின்ற போதும் விடுதலை என்ற பொது விழுமியத்திற்காக நியாயமான, நீதியான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இப்படியான மக்கள் சமூகங்களின் தர்மப் போராட்டங்களுக்கு எதிராக அனைத்துலக நாடுகள் அணி திரண்டு நிற்பது புரிந்துகொள்ள முடியாத புதிராகவே இருக்கிறது - என விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-6)

## தொப்பிகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை நடத்திய 'ஜெற்' விமானங்கள் அனைத்தும் பாதுகாப்பாகத் தளத்துக்குத் திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொப்பிகல காட்டுப் பகுதி மற்றும் வாகரைப் பகுதிகள் மீதே நேற்று விமானத் தாக்குதல் நடத்தப்பட்ட தாக மட்டக்களப்பு செய்திகள் தெரிவித்தன. இந்தப் பகுதிகளில் 'மிக்' விமானங்கள் இரு தடவைகள் தாக்குதல் நடத்தின .

(ஐ-6)

## ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் கல்வி வலயங்களுக்குரிய முடிவுகள் இன்று காலை யாழ். கல்வி வலயத்தில் வைத்து பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்படும்.

இதேவேளை -

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குரிய விண்ணப்பப் படிவங்களும் நேற்று எடுத்துவரப்பட்டு யாழ். கல்விவலயத்தில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-5-10-51)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதால் படையினரின் அனுமதி பெறாமல் செல்லும் அரச அதிகாரிகள் பலர் கடந்த சில தினங்களாக சோதனைச் சாவடிகளில் வைத்துத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர்.

(ம)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன. இராணுவ வாகனங்களைப் பயன்படுத்திப் பல சட்டவிரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நகரின் பிரதான வீதிகளில் இராணுவப் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் -

இராணுவ வாகனங்களை இவர்கள் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ம-6)

கணக்கீடு
A/L 2001 பகுதி-II
கம்பனி
ஆரம்பம்:
25-03-2001 ஞாயிறு 4.00 p.m.
BY: கலைச்செல்வன்
அறிவகம்
கல்வி நிலையம்,
அச்சுவேலி. (85670)

ஆரம்பம்!
MARCH
25
LOGIC - (PART - II)
(விஞ்ஞானமுறை)
எஸ்.எஸ்.மனோகரன்
BECON யாழ்.நகர்
(வெலிங்டன் சந்தி)
❀ ஏப்ரல் 8ஆம் திகதிக்குப் பின் எந்தப் பிரிவிற்கும் புதிய அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

சுடர் ஒளி
25-03-2001 இதழ்
நாளை கிடைக்கும்
பிரபாகரனின் கம்பீரமான பெரிய அளவுப்படம்
வைகோ, நெடுமாறன், ராமதாஸ் ஆகியோரின் படங்கள்
மணப்பெண் வாஜ்பாயின் கையில் கருணாநிதி முத்தமிடுதல்
ஜெயலலிதா நாதஸ்வரம் இசைக்க
மூப்பனார் தவில் வாசிக்கும் அருங்காட்சிகள்
இவை அனைத்தும் முகப்பை அலங்கரிக்கின்றன.
தேர்தல் சூட்டில் தமிழக நண்பர்கள் ஈழத்தமிழரோடு ஒட்டுறவை வெட்டி விடுவதா?
கூட்டணி - ஈ.பி.டி.பி. ஏட்டிக்குப் போட்டி
லண்டனில் சொல்ஹெய்ம் - பாலா சந்திப்பு விவரம்
அமெரிக்கத் தூதர் தமிழ் மக்களுக்கு செருப்பால் அடித்துவிட்டு குடை பிடிக்கிறார்.
இந்திய இலங்கை அரசுகளின் ஆயுதக் கொள்வனவு ஊழல்கள்
யாழ்ப்பாணத்தில் மலேசியத் தமிழர்களுக்கு ஏற்பட்ட அருவருப்பான அனுபவம்
போரினால் மாணவர் மனதில் பதிந்துள்ள மறையாத வடுக்கள்
மற்றும்
அரசியல் அம்பலம், சினிமா, கேள்வி - பதில்
போன்ற பல சுவையான அம்சங்கள்
(C/15857)

நாளைய சந்ததியினரின் இன்றைய தெரிவு
யாழ்.கல்வி நிலையம்
ஆறுகால்மடம்.
மாணவர்களே!
A/L 2003
கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்:-
28.03.2001 புதன்கிழமை 4. p.m.

| | |
|---|---|
| Tam. | - V.M. லிங்கம் |
| H.C. | - N.T. தரன் |
| Log. | - S. ஜெயந்தன் |
| His. | - A. அன்ரன் |
| Geo. | - S. ஜங்கரன் |
| Acc. | - N. ரஞ்சித் |
| Com. | - S. சிவா |
| Eco. | - V.J. குபாபரன் |
| B.Sta. | - B. ரூபன் |
| Eng. | - N. பத்மராஜா |
| I.Q. | - A. குமாரவேல் |
| | - A. அன்ரன் |

மாணவர்களே O/L!
DAY CLASS
ஆரம்பம்: 28. 03. 2001
புதன்கிழமை (8. 30-2. 00)
❀ இவ்வருடம் இரண்டு பிரிவுகள் மட்டுமே.
(85736)

BITSMANS
கல்வி நிறுவனம் - மானிப்பாய்
பிரிவு I
2001 O/L
DAY CLASS
எமது வழமையான SUPER GRADE ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகின்றது.
ஆரம்பம் :- இன்று 23.03.2001 வெள்ளி காலை 8. 00
குறிப்பு:- "எமது நிறுவனத்தின் கல்வித் தரத்திற்கு கடந்த கால பரீட்சைப் பெறுபேறே சான்றாகும் -
(85725)

இறுதித்தடவையாக
கைலாசபதி கலையரங்கில்
உயிர்விசை
(நாடக ஆற்றுகை)
25~03~2001
ஞாயிற்றுக்கிழமை
10.30 (பு.நேரம்) 3.30
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்

MCS MOBILE NET
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
50% Free
Diploma in Java Language (Sun.,Sat.) 7.00 - 8.30, (Sun.,Sat.) 9.30-11.00
Diploma in Data Base Management System (Mon.,Wed.)1.00 - 2.00
Diploma in Desk Top Publishing (Sun.,Sat.) 5.00 - 6.00
Diploma in Business Administration (Sun,Sat) 12.00 - 1.30, (Tue.,Thu.) 9.00-10.30, 4.00-5.30
(C/15853)

## மரண அறிவித்தல்

### திருமதி இளையதம்பி பூரணம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி இளையதம்பி பூரணம் நேற்று (22.03.2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இளையதம்பியின் மனைவியும், காலஞ்சென்ற அன்னராணி தேவசகாயம், சகோதரி கிறிஸ்ரமெல், திருமதி புஸ்பராணி செல்வராசா (ஆசிரியை), அருமைநாதன் ((கணக்காளர் - ஆஸ்திரேலியா), திருமதி யோகராணி சிதம்பரப்பிள்ளை (ஆசிரியை), செல்வநாதன் (கணிதப் பீடாதிபதி - கிறீன் பல்கலைக் கழகம், ஆஸ்திரேலியா), திருமதி இதயராணி தனபாலசிங்கம் (வருமானவரி விகிதர் - அநுராதபுரம்), திருமதி தவராணி ரவி (கணக்காளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 8.00 மணிக்கு கீரிப்பல்லி மயானத்துக்கு எடுத்துச் சென்று நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'இராணி இல்லம்'*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.* (C/15858)

தகவல்:
அ.யேசுராஜன்
(பேரன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.03.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.